ஞானசம்பந்தம்

மலர் 10.] விக்ருதிஸு பங்குனிமீ 10—4—51. [இதழ்



சிதம்பரம், பாண்டிநாயகம்.

ஆசிரியர் : காசலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர் : ச. தண்டபாணி தேசிகர்.

தருமபுர ஆதீனம்

குத்தகை ஏல விளம்பரம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான தஞ்சைஜில்லா மாயூரம்தாலூகா கொறுக்கை ஸ்ரீ வீரட்டேசுரசுவாமி தேவஸ்தானத்துக்குச் சொந்தமான அடியிற்கண்ட நஞ்செய் நிலங்கள் 1361-ம் பசலிமுதல் ஐந்து பசலிகளுக்கு மேற்படாமல் 1951௵ ஏப்ரல்௴ 18௳ மாலை 3-மணிக்கு மேற்படி தேவஸ்தானம் ஆபீஸில் ஏலத்தில் குத்தகைக்குவிடப்படும். ஏலகண்டிஷன்களும் இதர விபரங்களும் தேவஸ்தானம் ஆபீஸில் தெரிந்துகொள்ளலாம்.

சொத்து விபரம்.

மாயூரம் தாலூகா கிழாய் வட்டம் நாரணமங்கலம் கிராமத்தில் நஞ்செய் ஏகர் 34, செ. 12.

கொறுக்கை
தேவஸ்தான ஆபீஸ்,
7—4—51.

T. S. Ganapathy,
Accountant.

தூத்துக்குடியில் ஆண்டுவிழா:— தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 67 ஆம் ஆண்டு நிறைவு விழா வரும் கர௵ சித்திரை௴ 29, 30 (12, 13—5—51) ஆம் நாட்களில் நடைபெறும். ஈரோடு, கலைமகள் கல்விநிலையம் ஆணையாளர், திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் B.A., L.T., அவர்கள் விழாப்பேரவையின் தலைமைதாங்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

மஞ்சக்கொல்லையில் மகாகும்பாபிஷேகம்:— மஞ்சக்கொல்லை ஸ்ரீ குமரகோயில் கும்பாபிஷேகம் 11—4—51 புதன்கிழமை காலை ஒன்பதுமணிக்கு நிகழும். 8—4—51 முதல் நாடோறும் சித்தாந்தசரபம், சிவத்திரு. ஈசானசிவாசாரியாரவர்கள் தலைமையில் சென்னிமலை, திரு. ஞானசம்பந்த முதலியார், திரு. க. வச்சிரவேலு முதலியார் B.A., L.T., திரு. R. P. அமிர்தலிங்கம் பிள்ளை, சிவக்கவிமணி, திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், திரு. கிருபானந்த வாரியார் ஆகியோர்கள் சொற்பொழிவாற்றிவருகிறார்கள்.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 10] விக்ருதி௵ பங்குனி௴ 10—4—51. [இதழ் 5

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

பண்பாடு எது?

மனித வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் பண்பாடு விளங்குகின்றது. ஒருவரோடு ஒருவர் வெறுப்புக்கண் கொண்டு நோககாது பழகச் செய்வதே பண்பாடாகுமா என்றால் அவ்வளவில் அது அமையவிலலை. ஒருவரை ஒருவர் ஏமாற்ற இனிமையாகப் பேசுதலில் அமைந்ததோ என்றால் அதிலும் அது அமையவில்லை. கலந்து பழகுவதிலோ என்றால் அதிலும இல்லை. ஆனால் இவை எல்லாவற்றிலும் கலந்து எல்லாருடைய மனமலர்ச் சிக்குங் காரணமாயிருப்பது எதுவோ அதுவேபண்பாடென்று பகரப்படுவது.

உண்மையான பணபாட்டினாலேயே உலக சமாதானம் உருவாகிறது. உலகச்சிககல்கள் ஒழிகின்றன. ஆடையும் அணியும் பழககமும் வழக்கமும் ஆகிய

பண்பாடுகள் அனைத்துமே ஆசை வளர்ச்சிக்கு அடிப் படையாய் இருத்தலின் அவை உண்மைப் பண்பாடாக இருத்தல் முடியாது.

உண்மைப் பண்பாடோ உலகத்தையே ஓரினமாகப் பார்ப்பதில் அமைந்திருக்கிறது. சாதி சமயப் பிணக்கு களுக்கு அப்பாற் பட்டது. அது காணபதெல்லாம் ஒற்றுமை. அது ஆக்குவன எல்லாம் வளர்ச்சி. இந்த உண்மைப் பண்பாடு ஒருக்காலும் ஓடி ஆடித் திரிந்து பரபரக்கின்ற உள்ளததில் உண்டாக்வே முடியாது. ஆத்மீக உணர்ச்சியால் ஒளிபெற்றிருக்கின்ற உள்ளத் திலிருந்தே அது எழுவது. உழைப்பின் வாயிலாக எல்லாரிடையேயும் பரவி இன்பத்தை விளைவிப்பது.

சுருங்கச்சொன்னல் இறை உணர்ச்சி அற்ற எந்தப் பண்பாடும இன்பம் பயவாது என்பதே. இதனலேயே பசி பட்டினி என்கின்ற தீராப் பிணியால் வாடும் நாட்டு மக்களுக்குக் கலாசாரப்பண்புகளை அறிந்து கொள்ள முடியாதென்றும் அண்மையில் நேருஜி பேசியிருக் கின்ருர். எந்தத் துன்பங்களும் மன அமைதி என்கினற பண்பாட்டின்முன் நிலைத்து நிற்க இயலாது.

இத்தகைய ஆத்மீகப் பண்பாட்டில் இருந்த பெரிய வர்களே 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்' என்று அறைகூவி அவனியெல்லாவற்றையும அஞ்சா மையில் - ஆண்மையில் திளைக்கச் செய்திருககிருர்கள். 'அஞ்சுவது யாதொன்றும இல்லை, அஞ்சவருவதும் இல்லை' என்று அவர்கள் உற்சாகமூட்டி யிருககிருர்கள்.

இவ்வுற உரைகளை மனத்தில்வைத்து, நம்நாட்டின் பழைமையான பண்பாட்டில் நிலைத்திருந்து, அனைத்தை யும் ஆண்டவனகவேகண்டு பேரின்பம் எய்துவோமாக.

மெய்கண்டார் விஜயம்

[திரு. மு ஞானப்பிரகாசம், B. A., B. SC. யாழ்ப்பாணம்.]

முந்திய ஓர் கட்டுரையில், உடம்பின் வெகு ஆழத்திலிருந்து புற உலகை நோக்கி ஓடிவரும் உயிருணர்வு, கண் முதலிய புறக்கருவிகளோடு கூடி நின்று புறப் பொருட்களை அறிகின்றது என்று கூறினோம். அவ்வாறு அறிதற்கண், உயிரறிவானது தன்பழைய சரித்திரத்திற்கேற்ப தனகுள்ளே தான் நிர்மாணித்துள்ள ஒரு பழைய ஆராய்ச்சி உணர்வால், புறப்பொருளைப் பொது வகையில் வைத்து ஆராய்ச்சி செய்தும், அவ்வாறே தனக்குள்ளே யுள்ள ஒரு பழைய அபிமான உணர்வால், அந்தப் புறப்பொருளைத் தனதாக்கியும், கடைசியாகத் தனகுள்ளே ஒப்பொன்றைத் தான் நிச்சயித்து வரும் ஒரு பழைய உணர்வால், இது நல்லது இது தீயது என்றும், இது தர்மம் இது அதர்மம் என்றும், இது சிறிது இது பெரிது என்றும் தன்னால் காணப்பெற்ற புறப் பொருளுககு ஒரு முடியுஞ் சூட்டித் தன்னகத்தே பதித்து விடுகிறது. இவ்வாறு புறப்பொருளை உள்ளிழுத்து வைத்து வைத்து பொது வகையில் ஆராய்ச்சி செய்யும உயிரறிவின் முதல நிலைமையையே மனம் எனக கூறினர். அந்தப் புறப்பொருளைத் தன தாகி நிற்கும் உயிரறிவின் அந்த இரண்டாவது நிலையையே அகங்காரம எனக் கூறினர். தனதாக்கிய அந்தப் புறப்பொருளை இது நலலது இது தீயது என்றும், இது தர்மம் இது அதர்மம என்றும் தான் அந்தப் புறப் பொருளுக்கு ஒரு முடி சூட்டித் தன்னகத்தே சிறப்பு வகையில் பதித்துவிடும் அந்த மூன்றாவது நிலைமையே புத்தி எனக் கூறினர். தன்னகத்தில், மேற்பரப்பிலே, நிகழும் இந்த மூன்று நிலைகளையும ஒன்றாகச் சேர்த்து மனம் எனக கூறுவாரும் உளர். இந்த மனத்தையே,

தானென்று மயங்கி வாழும் மக்கள் எத்துணைக் கல்வியாளராயினுஞ்சரி, எத்துணை ஆராய்ச்சியாளராயினுஞ் சரி, எச்சமயத்தவராயினுஞ்சரி, அவர்கள் உண்மையில் ஆஸ்திகர்களாகார். அவர்கள் தம்மிடத்தில் மேற்பரப்பில் நிகழ்கின்ற ஆராய்ச்சித் திறனையும், புத்தி சாதுர்யத்தையும் விவேகத்தையும் வணங்கி வாழ்வதற்குரியரே யன்றி, தன் தலைவனின் சொரூபத்தையும், தலைவனைச் சார்ந்து வாழும் தமது சொரூபத்தையும் அறிதற்குரிய தகுதியுடையவர் ஆகார். மனமென்றால் என்ன, அகங்கார மென்றாலென்ன, புத்தி யென்றால் என்ன உயிரறிவு தன் பழைய சரித்திரத்திற்கேற்ப ஒவ்வொர் அளவை நிர்மாணித்துப் புறப்பொருட்களை அளந்து அளந்து அறியும் ஒவ்வோர் நிலைகளேயாகும். அதனால் அவற்றால் பெறப்படும் ஞானமும் சுட்டு ஞானமென்றும் கருவிஞானமென்றும் பெயர்கள் பெறும்.

ஒரு புறப்பொருளை அறிதற்கண் மனத்தில் நிகழும் ஓர் சுழற்சியை இன்னொரு வகையில் ஆராய்வாம். தண்ணீரானது தான் வைக்கப்படும் பாத்திரத்தின் வடிவத்தைப் பெறுகின்றதல்லவா? அதுபோலவே உயிரறிவானது தனது முதல் நிலையில் அசைந்து நின்று, தான் கிரகிக்கும் பொருளின் வடிவத்தைப் பொது வகையில் பெறுகின்றது. பின்னர் அபிமானத்தால் அந்த வடிவத்தை ஸ்திரப்படுத்துகிறது. கடைசியாகத் தொடங்கிய சுழற்சியை முடிக்கும் தறுவாயிலில் இது நல்லது இது தீயது என்று நியாயத் தீர்ப்புங்கூறி, அந்த வடிவத்தைச் சிறப்பு வகையில் அழுத்தமாகத் தன்னிடத்தில் பதித்து விடுகின்றது. மனம் இவ்வாறு கணந்தோறும் சுழன்று சுழன்றே இயங்கிக்கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு சுழற்சி முடிவிலும் அது ஒவ்வொன்றைத் தன்னிடத்தில் பொறித்து விடுகிறது. அதனால் எமது பழைய சரித்திரம் முழுவதும் ஏதோ ஒரு

வகையில் அப்படியே மனத்தில் பதிந்து கிடக்கிறது. எனவே ஒரு வகையில் மனம் எனப்படுவது, ஆழமும அகலமும் அளககமுடியாத பரந்து விரிந்த ஆழமான சமுத்திரம போல்வது. மனத்தில் ஒரு நினைவு எழுந்து நிலைபெற்று மறைதல் பெருஞ் சமுததிரத்திலே குமிழி கள் தோன்றி நிலைபெற்று மறைதலைப் போல்வது. இந்த மனத்திற்கு ஆசையே வடிவம, அபிமானமே கொள்கை. அதனுல் அது இல்லதை உள்ளதெனக் காட்டுவது. உள்ளதை இல்லதெனககழிப்பது. துருமபை மலையென எடுத்துக் காட்டுவது. மலையைத் துரும் பெனக கழித்து விடுவது. இப்பேர்ப்பட்ட கொள்கை யற்ற, குணமற்ற, குறியற்ற மனத்துடன் உயிரறிவு வேறறச் சேர்ந்து நின்று ஏன் ஆடிய கறங்குபோல் ஓடி உழன்று வருதல் வேண்டும்? என்ற கேள்வி உள்ளத்தில் எழுமபொழுதே மனிதன் உண்மைச்சமய வாழ்வினுள் பிரவேசிககின்ருன். இநதக கேள்வி விசாரணைககுகந்ததன்று என்றும மனிதனை தன்னிடத்தி லுள்ள ஆராய்ச்சி செய்யும் திறனையும், முடிபுகட்டுந் திறனையும் பண்படுத்தி வருவானுகில் அதுவே போது மானது என்றும தற்கால அறிஞர் கூறுவர். எம முன்னோர் அப்படியல்லர். இவர்கள் மனம்வேறு, உயிரறிவாகிய தான் வேறு என்ற உண்மையை உணர்ந்தவர்கள் - மனத்தைப்பற்றிக கூறுமபொழுது, —மனமெனும சுழற்சியைப்பற்றிக கூறும் பொழுது உயிர்களதோறும இறைவன் மறைந்து நின்று நிகழத் தும் வெளிப்படையான பஞசகிருததிய நடனம் அதுவே எனக்கூறுவர். பாருங்கள்! பல்லாயிரககணககான நினைவுகள் எங்களிடத்தில் எழுகின்றன. போதிய காரணத்துடனும் ஒருவித காரணமின்றியும் பற்பல ரீதியில் அவைகள் எழுகின்றன. எழுந்த நினைவுகள் சில கணங்களுககு நிலை நிற்கின்றன பின்னர் மறைந்து விடுகின்றன இவ்வாறு நினைவுகள் எழுவதும்.

அவைகள் நிலை பெறுவதும், அவைகள் மறைந்து போவதும் எங்கள் கண்முன்னிலையில், எங்களிடத்தில் ஒருவர் நிகழ்த்த நிகழ்ந்துவரும் படைப்பு திதி சங்காரமல்லவா? உலகம் முழுவதும் தங்கம் என்றும், வெள்ளி என்றும் அழகென்றும், செல்வமென்றும், காணி என்றும், பூமி என்றும், தொட்ட தொட்ட இடமெல்லாம் பேர்கபோகக்கியப் பொருட்களை நிரப்பி வைத்திருக்கும் எல்லாமவலல எங்கள் முதல்வன், அவ்வாறு மனம் என்னும் மகாசக்கிரத்திலூன்றி நின்று ஊனநடனம் புரிந்து அதைச் சதாசுழறறிக கொண்டு நிறபதனாலேயே அழகும் அறபுதமும் வாயந்த இந்த உடம்பினால் அந்தப் போகஙகளை யெலலாம நாங்கள் கண்டு கேட்டு உண்டு உற்று உயிர்த்து நுகர்ந்து வருகிறோம். இந்த உண்மை எங்களை உள்ளத்தில நிலைபெறும் பொழுதே இறைவனை மறவாது வாழும் ஒரு பெருவாழவு எமககு வாய்ககும் என அறிக.

திருப்பனந்தாள், ஸ்ரீ காசிமடத்தில்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள்

7-வது ஆண்டு நினைவு நாள்

விக்ருதி ஆண்டு பங்குனித் திங்கள் 26ம் நாள்

ஞாயிற்றுக்கிழமை (8—4—1951) அன்று

மிகச் சிறப்பாகக கொண்டாடப்பெற்றது.

திருநெறிய தமிழ்வல்லவர் இரவு ஒன்பது மணிக்குத் தொடங்கி இன்னிசைக கருவிகளுடன் திருமுறை ஓதி திருவீதி வலம வந்தார்கள்.

திருவையாறு திருமுறை மாநாட்டுத்

திறப்புரை

[தேவகோட்டை "தமிழ் வள்ளல்"
"சைவசித்தாந்தப் புரவலர்"
திரு. உ. ராம. மெ. சுப. சேவு. மெ.
மெய்யப்ப செட்டியாரவர்கள்]

திருச்சிற்றம்பலம்

களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் னிறைஇப் பத்தரைக் கோதில் செந்தேன்
தெளித்துச் சுவையமு தூட்டி அமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வ மாக்குமை யாறன் அடித்தலமே.

திருச்சிற்றம்பலம் —நாவுக்கரசர்.

பேரன்புமிக்க தலைவரவர்களே!

பெரியோர்களே!!

அப்பரடிகள் கைலைக் காட்சி கண்ட இத்திருத் தலத்திலே அருட்பெருங் குரவராகத் தருமையில் எழுந்தருளியிருந்து சைவத்தையும், தமிழையும் தமது இருகண்ணெனப் போற்றிப் புரந்து வரும் ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானம் அவர்கள் திருவுளப் பாங்கின்படி கூட்டப்பெற்றிருக்கின்ற இத்திருமுறை மகா நாட்டைத் தொடங்கி வைக்கும் பேறு எனக்குக் கிடைத்தது பற்றிப் பெருமகிழ்வடைகின்றேன்.

இப்பொறுப்பை ஏற்பதற்குரிய தகுதி என்னிடம் எவ்வளவு உள்ளதென்பதை நான் நன்றாக அறிவேன். என்றாலும், நமது மகாசன்னிதானம் அவர்கள் எனக்கிட்ட கட்டளையையும் இங்குக் குழுமியுள்ள உங்கள் பேரன்பையுந்தான் எனது தகுதிகளாகக் கொண்டு இப்பணியை ஏற்றுக்கொண்டேன்.

திருமுறை ஆசிரியர்களில் பெரும்பாலோரது திருவாக்கில் இடம்பெற்றுள்ள இத்திருத்தலத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் பெருங்கருணையைத் துணைக்கொண்டு திருப்பணி செய்யும் அரியதொரு வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளதும் ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளாக எங்களுக்கும் ஆதீனத்துக்கும் உள்ள தொடர்பு பல வழிகளில் பெருமை தந்து வருவதும், எங்களுக்கு எப்பொழுதும் நெஞ்சில் நின்று இன்புறுத்துவனவாகும். என்றும் எங்களைப் பெருமைபடுத்துவதையே கருத்திற்கொண்டுள்ள மகாசந்நிதானம் அவர்கள் இந்த விழாவிலும், எனக்கு ஒரு நல்லிடம் தந்து சிறப்பளித்தமைக்கு நான் எழுமையும் கடமைப்பட்டுள்ளேன்.

அன்பர்களே!

தோன்றி நின்று ஒடுங்குவதாகிய இவ்வுலகத்திலே வாழும் மக்கள் அனைவரும் உடல் வகையால் ஒரு தகுதியினர் போலக் காணப்பட்டாலும், நினைப்பும் மொழியும் செயலும் ஆகியவற்றால் வேறு வேறு நிலையினராகவே காணப்படுகின்றனர். உலகம் என்று தோன்றியதோ அன்று தொட்டே கடவுள் உண்டு என்பாரும் இல்லை என்பாரும் ஆகிய இருசாராரும் வாழ்ந்துதான் வருகின்றார்கள். கடவுள் உண்டு என்பார் அனைவரையும் நம்மவராகக்கொண்டு இல்லையென்பாரை அழைத்து மனிதன் செய்யமுடியாத செயல்கள் சில உலகத்தில் நிகழக் காண்கின்றோமே? அவை யாரால் செய்யப்பெறுகின்றன என்று கேட்டால் அச்செயல்கள் இயற்கையால் நிகழ்த்தப்பெறுகின்றன என்று எளிதில் சொல்லிவிடுகிறார்கள்.

இயற்கை என்ற ஒன்று எதனையும் செய்யவல்ல ஆற்றலுடையதா? என்பது அவர்கள் சிந்தனையின் முடிவிடத்தை அடையாத காரணத்தால் அவ்வாறு சொல்லும்படி நேரிடுகிறது. கடவுளில்லை என்பாரின் இயற்கை நியதியே ஏறக்குறைய நாம் கடவுளுண்மை என்ற பெயரால் சொல்லுவது.

உலகத்தைக் கடந்து நின்று-உலகியலறிவுக்கு எட்டாத தாகி - சொறபதங் கடந்த தூய்மை உடையதாக இருக்கின்ற கடவுளைக்காணும நெறிகள், இவவுலகத்திலே வாழுகின்ற மககளது அறிவு நிலைகளுக்குத்தகப பலவேறு தகுதிகளில் வரமபு செய்யப பெற்றுளளன

சமய நெறிகளில் அறுதியிட்ட சமயத் தலைவர்கள் தங்கள் தங்கள் அறிவு அனுபவ வாயிலாக எழுந்த உணமைகளை மக்கள் அறிநதொழுகி நலம பெறல்வேண்டும என்னும கருத்தில் வெளிபபடுத்திச சென்றூர்கள். அறிவும, அனுபவமும, எந்த நாளிலாவது முடிவெல்லையை அடைவது என்பது இல்லை ஆதலின் அவவறிவு அனுபவங்களால் காணும உண்மைகளும முறற முடிந்த உண்மைகளாக இருக்க முடியாது. ஆகவே, அருள் தோய்ந்து வெளிப்படுகின்ற உண்மைகளே அழியாதன என் பதை நன்கு அறியலாம்.

பல வேறு சமய நெறிகளிலே வாழுகின்ற மக்கள் அவ்வச சமயத் தலைவர்கள் உணர்ந்து கூறிய உண்மைகளில் மன நிறைவு பெற்று மேலும பெருநலங்களை மிகுதியும துய்த்தல் வேண்டும் என்னும கருத்து இலலாதவர்களாய் வாழ்கின்றூர்கள்.

வெய்யிற் பொழுதில் விடாய் தீர நீரில் மூழ்க நினைந்த ஒருவன் ஆற்றின முழங்காலளவில் இறங்கி நீராடி மகிழ்தலும, இடுப்பளவு சென்று இன்புறுதலும, ஆழமடங்காத அளவிற் சென்று நீநதிக் களிததலும உண்டல்லவா? அதுபோலப் பேரின்ப வெள்ளத்தில திளைககின்ற நிலையும் பலதிறப்பட்ட தாகும.

மீண்டு வாராத பெருநெறியாகிய அழிவற்ற முத்திநெறி சைவசித்தாநத நெறி என்பது ஆன்றோர் கண்ட முடிவு அந நெறியில் ஒழுகுபவர் ஒரு சிலரே ஆவா. இதனை,

"மாநிலம் புரக்கு மாசி லாமணி
ஞான சம்பந்த ஞான தேசிக
நலலருட் டிறத்தால நம்பி நீயே

பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண் டுய்யெனக்
குடிலை யென்னும் தடவயல நாப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய் சி
வேத மென்னும் பாதபம் வளர்த்தனை
பாதபம் அதனில படுபயன் பலவே, அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே இலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பு மிவவாறு பயப்ப
ஒரும்வே தாந்தமென் றுச்சியிற பழுத்த
ஆரா வின்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே''

என்ற குமரகுருபர அடிகள் திருவாக்கால் உணரலாம். சைவசித்தாநதத் திருநெறியைத் தெளிவுபெற விளககிக் கூறு கின்றவை திருமுறைகளும மெயகண்ட நூல்களுமாம். பனனி ரணடு திருமுறைகளை நமக்குத் தந்த பேராசிரியர் இருபத் தெழுவா ஆவா. பகற்பொழுதில் புற இருளை அகற்றுவதற்குப் பன்னிரு சூரியர்களும இராபபொழுதில் இருபத்தேழு நட்சத் திரங்களும துணையாய அமைந்திருப்பதுபோல, மெய்ஞ்ஞான உணர்வை மறபபதாகிய அக இருளைப் போக்கிச சோதியாய் சுடராய்ச சூழொளி விளக்காய் இலங்கும சிவத்தைக் காட்டுவன திருமுறைகள் என்பதை உணரவேண்டும்.

திருமுறை என்ற சொல்லுக்கு எல்லோருடைய மனத் தூக்கும் இன்பமூட்டுகின்ற நேர்மையான நூல என்பது பொருள். யாா யார் எவ்வாறு நோக்கினும அவரவர்க்கு வேண்டிய அரும் பொருள்கள் திருமுறைகளில் மலிந்து கிடக்கின்றன வடமொழி வேதத்தைச் செய்த கடவுளே திருமுறைச சுவையில் ஈடுபட்டு மயங்கினுரென்று வரலாறு கூறுகின்றது. திருமுறைகள கடவுளுககுரிய ஐநதொழில்களையும் செய்தன.

சமயப் பேராசிரியர்களாகிய சமபந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் அருளிய பாடல்கள் முதல் ஏழு திருமுறைகளாக அமைநதுள்ளன. தேவாரத் திருமுறைகளைக் கேட்ட திருச செவிகள் தனது பாடல்களைக் கேட்க இசையுமோ என ஐயுறு கின்றார் தாயுமானப் பெருநதகையார்.

"தேவரெலாம் தொழச்சிவநத செந்தாள் முக்கட்
செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப் பாக
மூவர்சொலுந் தமிழ்கேட்குந் திருசசெ விக்கே
மூடனே னியம்பியசொன் முற்று மோதான்"

"ஆளுடைய பிள்ளையாரது அருந்திருப் பாடல்களை அறியா தார் வெம்பிறவிக் கடலினின்றும மீளமுடியாதார்" என்பதை நமபியாண்டார் நமபி கூறுகின்றார். அது,

"காழி நாடன் கவுணியர் தலைவன்
யாமமை நோக்கி மலைமகள் புதல்வன்
திருந்திய பாடல் விரும்பினர்க் கலலது
கடுந்துய ருட்புகக் கைவிளிக் கும்மிந்
நெடும்பிற விக்கடல் நீந்துவ தரிதே."

என்பதாகும. ஞானசமபந்தப் பிள்ளையாரது தேவாரத்தை அகக்கண் கொண்டு நோககுவார்க்குச் சிவமும, புறக்கண் கொண்டு நோக்குவார்க்கு உலகியலிலே காணபபெறுகின்ற எல்லா இன்பங்களும தோன்றும பிள்ளையாரின் பின்வந்த ஆசிரியர்களுள், அவரைப் போறறுதார் எவரும இலர். புறச சமயத்தவர்களும தங்கள் நூல்களில பிள்ளையாரைப பாராட்டிச சென்றிருபபதைக் காணலாம. முத்தமிழ் விரகராகிய பெருமானது செய்யுட்கள் இசை நுட்பம மிகப் பெற்றனவாகவும, இலக்கியச சுவை முதலிய எல்லாச சுவைகளும பொருந்தப் பெற்றனவாகவும விளங்குகின்றன.

சிறந்த செய்யுட்கள் செய்தமையால் இறைவனாலேயே "நாவுக்கரசர்" என அழைக்கப்பெற்றார் அப்பர். "தாண்டக வேந்தர்" என்பது அவருக்குப் பின்வந்த ஆசிரியர்கள் அளித்த திருப்பெயர்.

"சைவப் பெருநெறிக்கே, அணியன நாவுக்கரையர் பிரான்ற னருந்தமிழே" என்று சிவப்பெரு நெறியின் திருவுடை அழக னாகத், திருநாவுக்கரையரை நம்பியாண்டார் நம்பிகள் காணு கின்றார். "வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடற் றொடை யருச்செவ்வாயுள் சிவவேடப் பொலிவழகுந் துதித்துவாழ்வாம்" எனச் சிவஞான சுவாமிகள் கூறியது கொண்டு, ஆளுடைய அரசரின் அமுதமொழி "ஞானம் தருதலின் தலையாயது" என்பதை அறியலாம். அமண் வயப்பட்ட அப்பர் சைவம் புகுந்து சாற்றிய பாடல்களாதலின், ஏனைச் சமயங்களின் பொய்மையும், சைவ சமயத்தின் மெய்மையும் அவை தெற்றென விளக்குகின்றன.

இறைவனுக்குத் தோழராகவிருந்து இன்றமிழ் பாடியவர் சுந்தரர். "திருத்தொண்டத் தொகை முன்பணித்த திருவாளன் வாசமலர் மென்கழல் வணங்கவந்த பிறப்பை வணங்குவாம்" என்று சேக்கிழார் அருளுகின்றார். அவ்வாறாயின், அத் திருத் தொண்டத் தொகையும், அவைபோன்ற பிற அவரது திரு வாக்குகளும் எத்துணைச் சிறப்பு வாய்ந்தனவாய் இருத்தல் வேண்டும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

"பித்தரிறை என்றறிந்தும் பேதைபால் தூதனுப்பு
வித்த தமிழச் சமர்த்தர் மெய்புகழ்வ தெந்நாளோ"

என்று தமிழ்ச்சமர்த்தர் என்ற பட்டத்தைச் சுந்தரருக்குச் சூட்டுகின்றார் தாயுமான அடிகள்.

வழுவிலாத பேர் மாணிக்கவாசகனெனப் பெற்ற திருவாத ஆரடிகளின் செய்யுட் சிறப்பு அளவிட முடியுமோ? மதத்தாலும், மொழியாலும், ஒழுக்கத்தாலும், உணர்வாலும், அறிவாலும், வேறுபட்ட மேலைநாட்டவர்களையும் ஈர்க்கும் பெற்றிமை வாய்ந்தது "திருவாசகம்" எனக் காணுகின்ற பொழுது, அதனையுடைய நாம் பெரும்பேறு பெற்றவர்களே.

இனி, திருவாசகம் மணிவாசகர் விருப்பத்திற்குப் பாடிய நூலாயிருக்கத் "திருக்கோவையார்" சிற்சபைக்கூத்தன் வேண்டுகோளுக் கிணங்கிச் செய்யப்பெற்றதெனும் ஒன்றே அதன் பெருமை காணப் போதிய சான்றாம்.

திருவிசைப்பா திருப்பல்லாண்டாகிய ஒன்பதாந் திருமுறையின் ஆசிரியர் ஒன்பதின்மர். பல்லாண்டு பாடிய சேந்தனார் திருவிசைப்பாவும் கூறியுள்ளார் இசைப்பா என்ற பெயராலேயே, "இறைவனது இசையைக் கூறும் பாட்டுக்கள்" என்பது புலப்படும். திருவிசைப்பாவும் பல்லாண்டும் சமயப் பேராசிரியர்களின் பெருந்தகைமை, உலகியலின் சிறுமை, பேரின்பத்தின் பெருமை, இன்பச் செம்பொருளாகிய இறைவனது அருள்நிலை முதலியவற்றைச் செவ்வனே விளக்குகின்றன.

திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் திருவாவடுதுறையில் தவஞ்செய்தனர் என்றும், ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் தவத்தால் அவர் கண்ட உண்மைகளே, ஒவ்வொரு செய்யுளாக அவர் திருவாக்கினின்றும் வெளிவர. அங்ஙனம் வந்த மூவாயிரம் பாடல்கள்தாம் "திருமந்திரம்" என்ற பத்தாந் திருமுறையாக இலங்குகின்றன என்றும கேட்கும் போது அரும்பெரும் உண்மைகள் அந் நூலில் இடம்பெற்றிருக்கும் என்பதில் ஐயமுண்டோ? இவரது பெருந்தகைமையைக் குறிக்கவே "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என்று ஆளுடைய நம்பிகள் அருளினார்.

பிறையவிர் சடைமுடி யிறையனுர் ஆதிய பன்னிருவர் பதினெராந்திருமுறை ஆசிரியர். அப்பனுக்கும, அமமையாக விளங்குகின்ற காரைக்காலமமையாரும, 'பொய்யற்ற கீரன் முதலாம் புலவர்' என்று கசசியப்ப சிவாசாரியர் வியநதோதிய நக்கீர தேவரும், முற்றும துறந்த படடினத்தடிகளும ஆகிய பெருநதகையாாகள் பதினெராந திருமுறை ஆசிரியர்களாக விளங்குகின்ருர்கள். நமபியாண்டார் நமபிகளின் ஆசிரியா பொல்லாப் பிள்ளையாரென்பதும், அவரிடம கறறுத் தெளிந்த தெளிவு பதினெராந் திருமுறையில் இடமபெறறிருக்கின்ற தென்பதும உணரத்தக்கன.

பன்னிரண்டாந் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணம பெயராலேயே பெரிய புராணமாக விளங்குகின்றது. தில்லைக்கூத்தர் உலகெலாம் என்று அடி எடுத்துக்கொடுக்க அதனை முதலிலும், இடையிற் பல இடங்களிலும, வைத்துப் புராணம பாடப்பெற்றுள்ளது. கற்பனைகளில் சேக்கிழாரனை யோர் யாருமிலர். சமய உண்மைகளையும அன்பு நெறியையும அறிநது ஒழுகுவதற்குத் திருத்தொண்டர் புராணம சிறந்த வழிகாட்டியாகும.

இத்தகைய தெய்வத் திருமுறை விழாவை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசநநிதானம அவர்கள் ஆணைப்படி உங்கள் அனபின் வழிநின்று திறநது வைககின்றேன்.

"சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய."

—தருமபுர ஆதீன ஸ்தபாகர்

வள்ளுவர் வகுத்த வழி*

[வித்துவான், திரு, மு இரத்தினதேசிகர், திருவாரூர்]

வள்ளுவர் ஓர் தெய்வப்புலவர். இவர்புகழ் தமிழகத்து மட்டும இன்றி இந்திய நாட்டிலும் - உலகு எங்கணும் பரந்து நிறகின்றது. உலகப்பெரும புலவர் தொகுப்பில் உச்சிமேற கொள்ளும உயர்வுபடைத்த இவரைத் தந்த தமிழகததின் தனிசசிறப்பு மேலை நாட்டவராலும் போறறப்படுவதாகிறது. வள்ளுவரிடத்து ஓர் தனிப் புதுமையைக காணகின்றோம். ஒருவர் எத்துறையில் வல்லுனராயினும் ஓரினத்தவரே அவரை விரும்புவர். ஆனல் வள்ளுவர் அப்படிக காட்சியளிககவில்லை. எத் துறையிலுள்ளாரும வளளுவரை ஏத்திப் புகழ்வதை இனறும நாம் காண்கினறோம். இவ்வுண்மையைப் பண்டைய நூல்களிலும உணர்கின்றோம். இவ்வாறு அனைவருள்ளத்தும ஓர் மயககைத் தந்து தன்மாட்டு ஆர்வங்கொள்ள வைப்பதால் வள்ளுவரை ஓர் மயக்க மருந்து என்றே கூறலாம. பணடை நாள் மருததுவர் சததிரசிகிச்சைசெய்ய மனிதனைக கட்டிப் புரட்டினர். இன்று மேலைநாடு அத்தகைய தொல்லையைத்தராது ஓர் மயகக மருநதைக க[illegible]டது. அமமருந்து இன்றுநோயாள ருககுச் செய்துவரும நலம அளவிடற்கரிது. அவவாறே வள்ளுவராகிய மயககமருநதும எக்கொள்கையுடையா ரையும் தமமாட்டு இழுத்து அவ்வவரது அக இருளை நீககிவருகின்றது.

---

*தருமபுர ஆதீனக கல்லூரி குருஞானசம்பந்தர் கழகத்தின் சார்பில் 18—3—51 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் திருநாட் சொற்பொழிவுசசுருக்கம்.

திருக்குறளிற்கு உரைகண்டார் பலர். அவற்றுள் பரிமேலழகர் உரைமட்டும் நிற்க ஏனைய வழக்கு ஒழிந்தன. காரணம் பரிமேலழகரின் உரையின்முன் அவை ஒளியிழந்தன. இவ்வுண்மை இன்று வெளிவந்த திருக்குறள் உரைவளம் காட்டிவிட்டது. எனினும் குறள் மலர்களும், குழந்தை உரைகளும் இன்று தோன்றுகின்றன. குழந்தை உள்ளம் ஆராய்ந்து உண்மை காண அவாவுமேனும் முதற்கண் அதற்குப் பட்ட ஒன்றினையே உண்மையெனக்கருதிப் பகுத்தறிவிற்கு இடங்கொடாது நின்று விடுகிறது. ஒன்றைமட்டும் இன்று தமிழுலகம் உள்ளத்தில் வைக்கவேண்டும். நூலை எழுதிய புலவரது உள்ளத்தைத் தொடாது தத்தமக்குத் தோன்றிய கருத்தை நூலினுள்ளே நுழைக்க முற்படுவது தமிழிற்கே ஒருபெருங்கேடு சூழ்வதாகும்.

மேலைநாட்டவரும் தமது மதநூலாகிய பைபிளோடு நமது திருக்குறளை வைத்து மதிக்க நாம் இன்னும் வாளா கிடப்பது சரியன்று குறள் மணம் எங்கும் கமழச்செய்ய வேண்டும். குறளின் பெருமை அது தோன்றிய நாளிலேயே பரந்து நின்று பல புலவருள்ளத்தையும் பிணித்தது. பலசமய நூலுள்ளும் இடம் பெற்றது

செய்யா மொழியாகிய வேதத்தைப் பலரும் பயில்வதால் அதன் வலிமை குன்றும் என எண்ணினர் அந்தணர். உதாத்தம் அனுதாத்தம் சுவரிதம் முதலிய சுரபேதங்களின் பயிற்சியால் வடமொழி வேதத்தைப் பயிலவேண்டும். ஆனால் தமிழ் மறையாய திருக்குறளை ஏட்டில் எழுதி யார் உரைப்பினும் அதன் சிறப்புக் குன்றுவதில்லை என்றால்; குறள் எந்நிலையிலுள்ளாருக்கும் அறிவுச்சுடர் அளித்து வரும் பான்மை எண்ணி மகிழ்தற்குரியதாகும்.

திருவள்ளுவர் தனது உள்ளத்தில் பட்டவற்றை அவர் வழித்தோன்றலகளாகிய நாம் எல்லாம் உய்யும் பொருட்டுச் சிறந்த வழிகளாகக் குறளில் வகுத்துச் சென்றார். ஒன்று கூடி வாழும் மககட சமுதாயத்திற் கென்றும் தனிமனிதனின் வாழ்விற் கென்றும திட்ட மிட்டுக கூறுவதைப் போன்று பாலகளையும இயலகளை யும் அமைததார். பால மூனறாக அமையினும் அவை அகம் புறம என்னும இரு கூற்றினுள் அடங்குவன வாகும. இவ்விரு கூறுகளுமே சமுதாய வாழவிறகான பொது நீதிகளைத தொகுத்துககூறுகின்றன. ஒவ்வொரு பாலிலும அமைந்த இயலகள் அவற்றை வகுத்துக் கூறுகினறன. அடக்கமுடைமை அனபுடைமை புறங் கூறாமை கல்வி கேளவி இரவு ஈகை என்பன போனற அதிகாரஙகள அனைததும நீ இதைச்செய் இதைச் செய்யாதே என்று தனிமனிதன ஒருவனுககு ஆணை தருவனபோனறு அமைந்துளளன. இது திருககுறளில் காணப்படும் ஒரு உண்மையாகும.

நாம எல்லோரும் தெய்வககொள்கை உடையராய் வாழவேணடும் எனற கருணை நோக்கோடு நூலில் முதற் கண் கடவுள்வாழதது எனற அதிகாரத்தை அமைத்தார். நூல எங்கணும கடவுள எனற சொலலே காணப் பெறாமையால திருவளளுவர் கடவுட்கொள்கையினை உடையவர் அல்லர் எனறு இன்று தமிழுலகம வாய் கூசாது பேச முற்பட்டுவிட்டது. இதனை அறிவுலகம ஏற்காது. கடவுள எனற சொல இல்லாது போயினும் அப்பொருளை உணர்ததும இறைவன் வாலறிவன் போன்ற சொற்களிருப்பதைக் கண்டும் அவற்றிற்குத் ததமககுத தோன்றியவாறு பொருள் கொண்டு வள்ளுவரையும நாததிகர் ஆககுவது அறிவுடைமை ஆகாது. குறளில சில இலலாதன உள; அவற்றை நீக்க வேணடும என்னும அவல ஒலியும் ஒருபால எழும்பு

கின்றது. இவை யாவும் தமிழரின் பண்பாட்டையே அரித்துககெடுககவந்த நச்சுப் பூச்சிகள் ஆகும.

வள்ளுவர் சுவர்கக நிலையங்களிலும் இமமை மறுமை களிலும் இன்ப துனபங்களிலும் நலவினை தீவினை களிலும ஒவ்வோர் உயிரும இறுதியில் அடைய வேண்டுவதாகிய வீட்டுலக இனபத்திலும் நமபிக்கை கொண்டவர் என்பதைக குறள் தெள்ளத் தெளிய எடுத்துககாட்டுகிறது.

வள்ளுவர் தனிமனிதனுக்குச்சொலலியுள்ள நீதிகள் பல மனித உள்ளத்தைப் பணபடுத்துகின்றன.

> "இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
> நன்னயம் செயது விடல்"

என்ற திருககுறளில் ஒருவன்' தனககுத் துன்பம் இழைத்தவனைத் தண்டித்தற்கு வழி கூறுகின்றார். உனககுத் தீங்கிழைத்தவனுக்கு நீ நன்மையைச செய்து அவன உனககுச் செய்த தீமையையும் நீ அவனுககுச் செய்த நன்மையையும உடனே மறந்துவிடு என கின்றார். ஏன் மறககவேண்டும்? அந்நினைவுகள் இருப்பின் பின் ஒருகால சினத்தையும், தன்முனைப்பை யும உணடாக்குமென வளளுவர் கருதுகின்றார்.

இரவு இரவச்சம போன்று மறுதலையாய கருத்துடைய இரு பொருள்களை எடுத்துககொண்டு யாவரும ஏற்றுக்கொள்ளுமாறு வள்ளுவர் முடித்துக காட்டும திறம போற்றற்குரியதாகும். இவ்வாறு பல வாக வள்ளுவர் வகுத்தவழிகள் தனி ஒரு இனத்திற்கு மட்டுமன்றி எவ்வினததவருககும ஏற்குமாறு அமைந துளள திறம வியத்தற்குரியதாகும்.

உதிர்ந்த சுடர்கள்

"வரருசி"

தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் :— இப்போது 300 எழுத்துக்குமேல இருப்பதால் எழுதுவதும், அச்சுக் கோர்ப்பதும் அதிக வேலை கொள்கிறது. முதலில் இவ்வளவு அதிகமாக எழுத்துககள் இருந்திருக்கவிலலை எனறுகூட நினைககலாம். எழுதுவோரின பழக்கததில் அலஙகாரமாக எழுதப்பட்டு இவை பெருகிவிட்டன என்று சொலலலாம. இந்தக களேபரமான எழுத்துக் கூட்டம் இக்காலத்திற்கு ஒவ்வாது இதை மாற்றி அமைததுவிட வேண்டியதுதான் என்று பொதுஜனம் அங்கீகரிககிறது. ஒவ்வொரு வோட்டரும எழுதது கற்க வேண்டியது அவசியமாயிருப்பதால் எழுததுககளின் மொத்தத்தொகைவெகுவாககுறைக்கப்படவேண்டியது அவசியமாயிருககிறது. இப்படியே களேபரமாண எழுத்துக கூட்டங்களை வைத்துககொண்டிருந்தால் அகண்ட ஆரம்பப் படிப்பு நோககம நிறைவேறாது. கீழத்தரப் பள்ளிகளில் மாதக்கணககாக எழுத்தறிவுககுக குழந்தைகள் போராடுவதை நாம பார்ககிறோம். இதற்காகச்சிலர் 70 எழுத்துக்களடங்கிய தமிழ் எழுத்துத் திட்டத்தை ஆதரிககின்றனர். சிலர் 107 வரை அனுமதிககின்றனர். சிலர் 42-க குள்ளேயே எழுததுககளை அடககிவிடலா மென்று கூறுகின்றனர். உயிரெழுத்துக்களுககுப் பொதுவான - ஒரேமாதிரியான அடையாளங்களை உபயோகப்படுத்துவதுதான் எழுத்துககுறையில கையாளப் படும் முககியமான உபாயம.

இதேசமயத்தில பர்னாடஷா என்ற ஆங்கில நாடகாசிரியர் தன் உயிலினமூலம் லக்ஷககணககான தன் சொத்துககளின் பெருமபாகத்தை ஆங்கில எழுத்துச்

சீர்திருத்தத்திற்குச் சிலவிட உபயோகப்படும்படி எழுதி வைத்திருக்கிறார் என்று பத்திரிகைகள் வெளியிடு கின்றன. ஆங்கிலத்தில் எழுத்துக்கள் மொத்தம் 26 தான். இவைகளை 40 ஆகப் பெருக்கவேண்டும் என்று ஷாவின் ஆர்வமாம்.

பசியும் பண்பும்:— உணவும் உடுப்பும் கவலை யில்லாமல் எந்தநாட்டில் கிடைக்கவில்லையோ அங்கு கலாசாரப் பண்புகளை வளர்ப்பது துர்லபமாகும் என்று ஸ்ரீமான் நேரு பேசி யிருக்கிறார். தன்னைப்போலப் பிறரையும் செய்து விடவேண்டும் என்ற எண்ணம் இக்காலத்தில் பல தேசங்களுக்கு உண்டாவதாய் அவர் குறிப்பிடுகிறார். நமக்கு வாலறந்த நரியின் பிரசாரம் ஞாபகத்திற்கு வராமலிருக்குமா? சிருஷ்டியைவிட அழித் தலையே இக்காலத்தின் போக்காக அவர் கருதுகிறார்.

நம் கற்பனைகளையும் அழகிய சிருஷ்டிகளையும் எந்த நிமிஷத்தில் அணுக்குண்டு அழித்துவிடுமோ என்ற பீதி நமக்கிருக்கும்போது கலாசாரம் பண்பு இவைகளை வளர்க்க நமக்கு அவகாசம் ஏது? சிரத்தை எப்படி வரும்? நம்பிக்கை எங்கே என்று கேட்கிறார் அவர்.

இப்போது படிப்பெல்லாம் விஞ்ஞான மயமாகி வருகிறது. கலாசாரம் என்று வழங்கப்படுவதும் உண்மை யான கலாசாரமல்ல. மாத்சரியம் வேற்றுமை முதலிய மனோபாவங்களைப்பரப்புவது கலாசாரமாகாது. உண்மை கலாசாரம், பண்பு என்பது மனத்தின் மலர்ச்சிக்கும், நடுநிலைக்கும் காரணமாகவேண்டும். அது அல்லாதது கலாசாரமல்ல. உண்மை கலாசாரமானால் உலகச் சிக்கல் களை அவிழ்க்க மிகவும் உதவும். அது அல்லாதது பொறாமைக்கும் வேறுபட்ட நிலைக்கும் காரணமாகும்.

நாகரீகம் உதித்த காலத்தில் ஆத்மீக உணர்ச்சியும் ஒளிபெற்றிருந்தது. இப்போது நாகரீகத்தின் பிற்பகல்

காலமாகிவிட்டதால் நாம் அவ்வுணர்ச்சியை இழந்து வருகிறோம். இருள் அணுகிவிடும்போலிருக்கிறது

ராஜீய விவகாரத்தில் உயர்ந்த வார்த்தைகளும் உயர்ந்த மனோபாவங்களும் செலாவணியற்ற நாணயங்களைப்போல் சீக்கிரம் கெட்டு வருகின்றன.

இந்தியாவைப்போலுள்ள சரித்திரப் பெருமை வாய்ந்த தேசங்கள் தங்கள் பழைய பெருமைகளை மறக்க முடியாது. மறப்பது சரியுமல்ல.

மதச்சார்பற்ற அரசாங்கம்:— 'ஸர் ஸி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் மதச்சார்பற்ற அரசாங்கம என்றதை தெய்வநம்பிக்கையற்ற அரசாங்கமென்று அர்த்தமில்லை என்று விளக்கிப் பேசியிருக்கிறார்கள். இந்தியாவின் பூர்வ சரித்திரத்தை நோக்கினால் இது விளங்கும். பல மதங்களுக்குத் தாராள மனப்பான்மையுடன் இடமளிக்கும் அரசாங்கமே நமது பூர்வீக அரசாங்கம். இந்து ஸமூகமோ அரசாங்கமோ ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பரப்பவோ, எதிர்க்கவோ தீவிர முயற்சி எடுத்துக் கொண்டதில்லை. மதம் தனி நபரின் சொந்த உரிமை. அதைப் பாதிக்கும் வேலைகளில் அரசாங்கம் ஈடுபடாது. "மதச்சார்பற்ற" என்ற வாசகத்தை அதிகம் அழுத்திப் பேசுவதால் மதத்தின் அவசியத்தை மறந்துவிடக் கூடாது. முற்றிலும் அரசாங்கம் மத விஷயத்தில் உதாசீனமா யிருந்துவிட்டால் ஸமூக நல்லெண்ணங்களையும் அவசியமான மதக் கோட்பாடுகளையும் தகர்த்தெறியும் கொடூர மனப்பான்மைகள் ஜனங்களிடையே மிகுதியாகிவிடும். இப்போதே தென்னிந்தியாவில் விக்ரஹங்களை உடைப்பதும் கோவில்களை இடிப்பதுமான நாச வேலைகள் தலைகிளப்ப ஆரம்பித்துவிட்டன. மதமே ஸமூக வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்ற எண்ணமும் ஏளனத்திற்கு உள்ளாகி வருவது கருதத்தக்கது.

ஆதாரக் கல்வி:— இதை ஒரு தொழில்கற்கும் திட்டம என்று கூறுகிறார்கள்.

நூறபது, தோட்டவேலை முதலியன சிறுவர்களுககு கற்றுக கொடுககப்பட வேண்டுமென்பதும, அவ்வுழைப் பிலிருந்து வரும ஆதாயத்தைககொண்டு பளளிகள நடத் தப்படவேண்டும் என்பதும யோசனையாம. இப்போது நடப்பிலிருககும ஆரமபக கலவிககுப் பிரதியாக ஆதாரக கல்வி புகுத்தப்பட வேணடும எனபது கோரிககை. குழந்தைகள ஆதாயம கிடைககும கைத் தொழில்களைக் கற்றுக கொளவதிலேயே பள்ளிககூடத் தையும சர்ககாருககுப் பளுவில்லாமல் போஷித்துவரப் போடப்படும் திட்டம இது என்பர்.

பம்பாயில் கலாசார ஸ்வதந்திர மஹாநாட்டில் ஸ்ரீ கே, எம. முன்ஷி பேசியிருககிறார். விஷயம ஆந்திரா எலலைகளில் கம்யூனிஸ்டு அதிககிரமங்கள. படிப்பாளிகளை அவர் எச்சரித்திருப்பது கவனிககத தககது. "இநதியாவில படித்த புததிமானகள் துஷ பிரசாரங்களினால தாங்கள் எவ்வழியே நடததப்படுகிறார் கள எனபதைச் சிறிதும் சிந்திதது அறிவதிலலை. நாச வேலைககாரர்கள கீழ்ககுக கீழான நுட்பமான உபாயங் களைக கையாளுகிறார்கள. "முனனேறறம;' எனறும, "ஒறறுமை" எனறும கவர்சசியாகப் பேசிப் படித்தவர் களையும தஙகள் வலையில சிககவைககிறார்கள். தஙகள் ஸிததாநதஙகளைப் பரப்ப வசீகரமான நாடகங்கள, இலககியங்கள் இவைகளை மறைமுகமாய் உபயோகிக கிறார்கள. கலாசார முனனேற்றம என்று பறைஅறிவிக கிறார்கள். உணமையறியாத புததிமானகளும ஏமாந்து விடுகின்றனர். "அவர்கள கோரும சுதநதிரம் உணமைச் சுதநதிரத்தை அழிப்பதற்குச் சுதந்திரம" என்று ஸ்ரீ ராஜாஜி கூறியிருககிறார். கலாசாரத் துறையில் அவர்கள் பிரசித்திபெற்ற புராதன கவிகளின வரை

முறைகளைத் தகர்த்துப் புது நாகரீக இலக்கியத்தை உருவாக்க யத்தனிக்கிறார்கள். கலாசாரம், இலக்கியம், ஆராய்ச்சி என்ற துறைகளை முன்னதாக உபயோகப் படுத்திக்கொண்டு பின்னர் பழையனவற்றை அழிக்கவும் பழிக்கவும் துணிகிறார்கள். இத்தகைய இயக்கங்கள் தங்கள் கைவீச்சை கல்வித் திட்டத் துறைகளிலும் பாடப் புத்தக நியமனக் குழுக்களிலும் காண்பித்து வருவது மிகவும் வருந்தத்தக்கது. இதற்கெல்லாம் இக்காலத்துப் படித்த புத்திமான்களுக்கு நிலையான மனோபாவங்களும், பழைய கலாசாரத்தில் நம்பிக்கையும், மனிதத்தன்மையில் மதிப்பும் குறைந்துவிட்டதே காரணமாகும்.

ஸ்டீபன் ஸ்பெண்டர் என்ற ஆங்கிலேயக் கவி மதராஸ் கிறிஸ்டியன் காலேஜில் "இன்றைய நூதனக் கவியின் இரு கடமைகள்" என்ற விஷயம்பற்றி ஒரு அரிய உபந்யாசம் செய்திருக்கிறார். அவ்விரு கடமைகள் எவை என்றால் (1) பழையனவற்றைப் பின்தொடர்வது. (2) அதைக் கால நிலைமைக்கேற்ப விஸ்தரிப்பது. பின் சொல்லப்பட்ட கடமையைச்செய்யாவிட்டால்தொடர்ந்து வரும் கலாசாரப் பெருக்குத் தடைப்பட்டுப்போகும். பழைய பாதையிலேயே திரும்பத்திரும்ப நடந்துகொண்டிருப்பதால் புது இலக்கியம் வெறும் "இமிடேஷன்" ஆகத்தானிருக்கும். இந்த "இமிடேஷ"ன்களால் பழையனவற்றிற்கும் மதிப்பு வரவரக் குறைய ஆரம்பிக்கும். உண்மையான நூதன கவி தலைமுறைக் கலாசாரத்தின் வழியே சென்று புது அமைப்புகளையும் ஏற்றுப் பழைய தொடர்பு விட்டுப்போகாமல் புதிய விஸ்தரிப்புகளை நிர்மாணித்து வழங்குபவனாவான். பழைய கவிகள் வெறும் கட்டுப்பாட்டுக் கவிகளாக இருக்கவில்லை என்பது ஞாபகப்படுத்திக் கொள்ளத்தக்கது. அதுபோல் நாமும் பழையதில் புதியதை சிருஷ்டிக்கும் உண்மைக் கவிகளைப் பெறவேண்டும்.

மதிப்புரைகள்

திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள செந்தமிழ்க்கல்லூரி 7-ம் ஆண்டு அறிக்கை: 9-6-1944ல இக்கல்லூரி தொடங்கப்பெற்றது. அப்பொழுது இருநத மாணவர்கள் 14-பேர. அவாகளுககு ஆசிரியர் இருவா. பின ஆணடுகள் தோறும விரிநதுகொணடே வநது நிகழ் ஆணடில 131-மாணவாகளையும, 10-ஆசிரியர்களையும பெறறுத் திகழ்கிறது. பாடத்திட்டமும இயன்ற அளவு பனமொழிப் புலமை பெறக்கூடிய முறையில் அமைநதிருக்கிறது 1947-ல் வீணைவகுப்பும, 1949-ல மிருதங்க வகுபபும தொடங்கி நடநது வருகிறது. மாணவர்களுககு உதவியாக 6932 நூல்களைக் கொணட நூல நிலையம ஒனறும உளளது. மறறும இக் கல்லூரியின் அங்கமாக கநதவேளகழகம ஏறபடுத்தப பெற்றுள் ளது அடுததபடியாக அறிக்கையில குறிக்கத்தககன பரிசுகள இததலைப்பில கலலூரி மாணவர்களின் பயிறசித்திறமை பரிசு களைககொணடு விளக்கபபட்டுள்ளது. இப்பகுதியில் கல்லூரி மாணவாகளுக்குப் பிறா அளிககும உதவிகளின விபரமும சோக் கப்படடுளளன. இதறகுப பிறகு கலலூரியின் சாாபில் நடந்த விழாககள இனனின்னவை என்று விளககமாகத தரபபட் டுளளன. விளையாட்டுபபோட்டியில் வெறறிபெறற மாணவர் கள, கலலூரியில படிதது முடித்து வெளியிடங்களில் ஆசிரியத் தொழில் பாாப்பவாகள, இலவசஉணவுபெறும (அவரவர்களின் தநதைபெயா ஊா பெயாகளுடன்) மாணவாகள ஆகியோர் களின் எணணிககை விபரமாகக காட்டப்படடுள்ளது. பின் சோக்கையாகப் பேரறககட்டளைகள் இணைக்கப்பட்டுளளன. இடைஇடையே பார்வையிட்டோர்களின் புகழுரைகள குறிககப் படடுளளன. இநத அறிககை கல்லூரியின் வளாசசியை அறி விபபதோடு, ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் மொழிவகையில் சமய வகையில சுகாதாரம முதலிய பொதுவகையில மறறும பிறவகையில் செய்துவரும பணிகள் அனைத்தையும ஒருசேரத் தொகுத்துக காட்டுகினறது என்னலாம.

வேதாகம நிரூபணம்:— ஆசிரியர்: யாழ்ப்பாணம். ச. **குமாரசுவாமி குருக்கள்.** இது ஒரு சிறந்தநூல். வேதாகமங்கள் வடமொழியிலேயே உள்ளன; வடமொழியும் தமிழ் மொழியும் இணைபிரியாதன, உடலும உயிரும போன்றன. ஒன்றற்கொன்று துணையாக நின்று கருத்தை வாரி வழங்குவன. வகுப்புத்துவேஷம காரணமாக மொழித்துவேஷத்தில் புகுதல் கூடாது; புகுந்தால் நாமே நம திருமுறையாசிரியர்களின் வாக்கினைப் புறக்கணித்தவராக எண்ணப்படுவோம், திருமந்திரத்தில் பெருமபான்மை, வடமொழிப்பயிற்சி யுடையார்க்கே விளங்குந் திறத்தன என்பன முதலாகிய பல கருத்துக்களை யெல்லாம் சந்தேகமறத் தோத்திர சாத்திர மேறகோள்களுடன் இதன் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். இவ்விளக்க நூலும் மொழித்துவேஷம காரணமாக எழுந்த சில அறிஞர்களின் கூற்றினை மறுத்தற்கு எழுதப்பட்டதாகலின் நிரூபணமாயிற்று. 67-தலைப்புகளில் 74-பக்கத்தில் எழுதப்பட்ட இநநூல் முதற் பாகமாகும. ஏனையவும் இனி வெளிவரசசெயவது சமயப் பணியில் சிறந்த பணியாகும். விலை ரூ. 1—0—0. வேண்டுவோர் 'சைவ ஆராய்சசி சங்கம, கரணவாய்; யாழ்ப்பாணம' என்ற விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

குடந்தை ஸ்ரீ மௌனசுவாமிகள் மகாத்மியம்: பெரியோர்களின் உபதேச மொழிகளே யன்றி அவர்களுடைய வாழ்க்கை வரலாறும மக்களைச செநநெறியில நிறகச்செய்யும் என்பதற்கு இநநூல ஒரு சான்று. சுவாமிகளின் வரலாறு திரு புவனத்திலிருந்து தொடங்குகிறது, இரணடாவது இயல் குமப கோணத்திலிருந்து அன்பர்கட்குக் காட்சியளித்துக் கொண்டிருந்ததை அறிவிக்கின்றது. 3 வது இயல் காட்சி அளித்த 24 ஆண்டுகளிலும் வெளிநாட்டிலிருநது வந்தும பணிவிடைசெய்தும பேறு பெற்ற பெரியோர்களின் கீர்த்தியை 45 பாடல்களால் அறிவிக்கிறது. இதுநெஞ்சை உருககும்பகுதி. பரிபூரணமான சுவாமிகளின் திருமேனி நகர்வலஞ் செயயபபெற்ற காட்சியை நேர்முறையில் இன்றும் பார்ப்பதுபோல் காட்டுகிறது அடுத்துள்ள பரிபூரண வியல். உடையில்லை, உணவில்லை, உரையில்லை, உறங்கிவாடும்

நடையில்லை; உலகுடைய ஒருமுதல்வன் இவனே என்று யாவரும் வியந்து கூறுமாறு விளங்கிய மௌனசுவாமிகளின் மகாத்மியத்தை உலகிற்கு உபகரித்தபெரியார் இரு பெருமபுலவர்களாகிய சபாபதி செட்டியாரும், அமிர்தம் சுந்தரநாதபிள்ளையும் ஆவார்கள். பாடல்கள் எளிமையும இனிமையும உடையன. பொழிப்புரையும் தரப்பட்டுள்ளது. இத்தகைய சிறந்தஞானியின் சரித்திரத்தை அச்சிட்டு உதவிய கும்பகோணம ஜவுளிவியாபாரம திரு. அ. வை. சுப்பிரமணியஞ்செட்டியார் அவர்களின் பேருபகாரச செயல் என்றென்றும் மறக்கற்பாற்றன்று. வேண்டுவோர் 'கும்பேஸ்வரசுவாமிகோயில் வடக்குவீதி' கும்பகோணம் என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தருமபுர ஆதீனப் பிரசாரம் திருமுறை மாநாடு

தருமபுர ஆதீனப் பிரசாரமாகத் திருமுறை மாநாடு, திருவையாற்றில் 1, 2—4—51 ஆகிய இரண்டு நாட்களிலும கொண்டாடப் பெற்றது. முதனாள்: 8½-மணிககே ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் ஆலயம் தண்டபாணி கோயில மண்டபத்தில் மககள் கூடியிருந்தார்கள். தேவஸ்தான தேவார வகுப்பு மாண்வ மாணவிகளும் ஆசிரியர்களும் திருமுறை முழக்கம் செய்தார்கள். 9-மணிககுப் பிரசார குழுத்தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை கூற, தேவஸ்தான கட்டளை விசாரணை ஸ்ரீமத் சுந்தரலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அருளிய ஆசியுரையை வாசித்தளித்தார்கள். அச்சிட்ட அது அனைவர்க்கும் வழங்கப்பட்டது. பின் சென்னை, செந்தமிழ்ப் பேரறிஞர், பன்மொழிப் புலவர் இரு. தெ. பொ. மீனாட்சி

சுந்தரம் பிள்ளை M. A., B. L., M. O. L. அவர்கள் தலைமை ஏற்றார்கள். திருவையாறு திருப்பணிச் செல்வரும், தமிழ் வள்ளலும், செந்தமிழ்ப் புரவலருமாகிய தேவகோட்டை ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியார் அவர்கள் தமக்கும் ஆதீனத்துக்கும் தொன்று தொட்டு இருந்து வருகிற தொடர்பையும், மகாசந்நிதானமவர்கள் சமயம் வாய்க்கும் போதெல்லாம் தன்னைப் பெருமைப்படுத்திச் சிறப்பளிக்கும் பெருங்கருணைத் திறத்தையும், பன்னிரு திருமுறைகளின் சிறப்பையும் எடுத்து விளக்கும் வாயிலாகத் தமது திறப்புரையைப் பேசிமுடித்தார்கள். அடுத்தது தலைவர் முன்னுரை; அதில் தமிழ் மொழியானது மிகச் சிறந்தது என்று சொல்ல வேண்டுமானால் அதற்குக் காரணம் பன்னிரு திருமுறைகளும் தமிழில் இருப்பது தான்; அதனால் தமிழைப் பாதுகாக்க ஒருவன் உண்மை விருப்பம் கொள்வானேயானால் அவன் திருமுறையை நன்கு படிக்கவேண்டும்; திருமுறையே தமிழுக்கு உயிர். திருமுறைகள் எங்களுக்கு வேண்டாம் என்று ஒதுக்கி மொழிப்போர் புரிவோர் பயனடையமாட்டார்; திருமுறை பொன், பொருள், எல்லாவற்றையும் கொடுக்கும்; துன்ப நீக்கம் செய்யும்; ஏன் பசித்தவனுக்குச் சோறு கூட போடும் என்றெல்லாம் திருமுறைப் பெருமையை நன்கு விளக்கி, ஆதீனம் செய்துவரும் அரும்பணியையும் பாராட்டிப் பேசினார்கள்.

பிறகு, கும்பகோணம் நகரமன்ற ஆணையாளர் திரு. கி. இராமலிங்க முதலியார் M. A., அவர்கள் 'தமிழ் ஞானசம்பந்தன்' என்பது பற்றிப் பேசினார்கள். 'சம்பந்தர்' என்பதுபற்றிச் சீகாழிக் கட்டளை விசாரணை வித்வான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் உபன்யாசம் செய்தார்கள். பின் மாலை நிகழ்ச்சியில் தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலைய ஆராய்ச்சிப் பேராசிரியர் திரு. K. வாசுதேவ சாஸ்திரிகள் அவர்கள் 'தமிழ்ப்பண்' என்பது பற்றியும், சென்னை ஆசிரியர்

பயிற்சிக் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் திரு. S. ஆறுமுக முதலியார் M.A., B.O.L., L.T. அவர்கள் 'அப்பர் அருள்முறை' என்பது பற்றியும், திருவையாறு அரசர் கல்லூரித தலைவர் திரு. பெ. திருஞானசம்பந்தம் M. A. அவர்கள் 'திருமுறையில் இலககியம்' என்பது பற்றியும், தஞ்சை, திரு, தொ. மு. பாஸ்கரத் தொண்டை மான் M. A., அவர்கள் 'தோழமை என்றொரு சொல்' எனபது பற்றியும் விரிவுரை நிகழ்த்தினூர்கள். தலைவ ரவர்கள் அப்பர் தொண்டில் சிறந்தவர்; அவர் தேவாரம் வயிற்று வலியிலிருந்து தொடங்குகிறது; அவர் செய்த அற்புதங்கள் பல; அவ்வவறறிற்கும் அவர் தேவாரத் திலேயே சான்றும் இருககிறது. உழவாரப்படை தாங்கி ஊர் ஊராகச் சென்று தொண்டு செய்தார். தில்லைக்குச் சென்றபோது நடராஜப் பெருமான் நடனததில் ஈடு பட்டு மனிதப் பிறவியும் வேண்டுவதே என்று பாடினூர் என்று பலபடப்பேசி அன்றைய நிகழச்சிக்குப் பின் னுரை கூறினூர்கள். கடவுள் வாழ்த்துடன் நிகழ்ச்சி முடிந்தது.

மறுநாள் திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு மீண்டும் கூட்டம் கடவுள் வாழ்த்துடன் தொடங்கிற்று. தேவஸ் தான தேவார வகுப்பு மாணவ மாணவிகள் இன்னி னிசைப்பாடல்கள் பாடினூர்கள். தலைவர் அவர்கள் பயிற்சித்திறனைப் பாராட்டி குறிப்பிட்ட பரிசுகளையும் அவர்களுககு வழங்கினூர்கள். 'வாதவூராளிசெயல்' என்ற தலைப்பில திருவாவடுதுறைஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பல வாணதேசிகர் கரந்தைப் புலவர்கலலூரித் தலைவர் திரு. உ. பழனி B. O. L. (Hon.) அவர்கள் மணிவாசகர் மாட்சியினை விளககிப் பேசினூர்களை. திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும் தருமபுர ஆதீனத் தமிழப் புலவருமான வித்துவான திரு. இராம கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் ஒன்பதாந்

திருமுறையிலுள்ள அருமையான கருத்துக்களை எல்லாம் எடுத்து மொழிந்தார்கள். பிரசாரக் குழுத்தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான்சுவாமிகள் அவர்கள் 'திருமூலர் தமிழ்' என்ற பொருள்பற்றிப்பேசினார்கள்.

அடுத்தது 'ஆதியுலா' என்றதலைப்பு. அதைப்பற்றி எளியநடையில் சென்னை கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் M. O. L. அவர்கள் விளக்கமாகப் பேசினார்கள். திருவையாறு அரசர் கல்லூரிப்பேராசிரியர் பிர்மஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியார் M. A. அவர்கள் கண்ணப்பரின் காதன்மையினை விளக்கி உபன்யசித்தார்கள். கடைசியாகக் கொடுமுடி முத்தமிழ்வித்தகி ஸ்ரீமதி K A. முத்துலெக்ஷ்மி அம்மையார் அவர்கள் 'சிவநெறியிற் சில மகளிர்' என்பதுபற்றிப் பெரிய புராணச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

தலைமைஏற்ற திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை M. A.. அவர்கள் முடிப்புரை கூற, தருமபுர ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர் வித்வான் திரு. ச. தண்டபாணி தேசிகரவர்கள் ஆதீனப் பிரசாரச்சார்பில் யாவர்க்கும் நன்றியுரை கூறி ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருளிய மாநாட்டு நிறைவு ஆசியுரையை வாசித்தார்கள். பின் கடவுள் வாழ்த்துடன் மாநாடு இனிது முடிந்தது. மணியும் 11 ஆயிற்று.

அதற்குமேல் திருமுறை ஊர்வலம். யானை மீது திருமுறைகளை எழுந்தருளுவித்து அலங்காரம் செய்யப் பெற்றது. ஆதீனப் பாடசாலை தேவார ஆசிரியர், மாணவர்கள், ஆதீனத்தைச்சேர்ந்த ஏனையதேவஸ்தான தேவார வகுப்பு ஆசிரியர்கள், உள்ளூர் தேவஸ்தான தேவார வகுப்பு ஆசிரியர் மாணவர்கள் ஆகியோர் திருமுறை ஓதிவர ஊர்வலம் நகர் வலம் வந்தது.

கடிதங்கள்

திரு. S. இராஜகோபாலபிள்ளை, பிக்ஷாண்டார் கோயில்.

......புத்தகத்தைப் பார்த்ததிலும் அடுத்துப் படித்ததிலும் அதன் ஒவ்வொரு பக்கத்திலும் ஆனந்தமே பெருகுகின்றது.

தென்னாட்டின் புண்ணியமே புண்ணியம் என எக்காலத்தும் ஆன்றோர் வியக்கும் வண்ணம் இப்புண்ணியம் பயக்கும் கண்ணிய நூலும் விளங்குகிறது. அருள் அற ஆட்சிகளைச் செவ்வனே நடத்தத் தமது இருப்பிடமாகத் திருத் தருமபுரம் பதியையே பதியாகவுடைய மகாசந்நிதானமவர்கள் சென்ற ஆண்டில், பொருள்மிக நிறைந்த திருவாசக நூலை, மக்கள் பொருள் நயம் தெரிந்து படித்துப் பேறுபெறவேண்டி விரிவுரையாக எழுதி அச்சிடுவித்து அருளினார்கள். அன்பே அவர்களது உருவும் குணமும் தொழிலும் எனனும் காரணத்தால் அன்றோ!

இந்த வருஷத்திலும் நமது திருவருள்நிறைந்த மடாதிபதி அவர்களின் அருள் ஆக்ஞையிருந்தவாறு தென்னாடே போற்றற்குரியது! திருவாசகத்துடன் வைத்தெண்ணப்படும் ஒரு வாசகமும், ஒப்பற்ற பெருவாசகமுமான திருக்குறளுக்கு உரைவளம் ஒப்ப நோக்கிப், பாடின பொருளுணர்ந்து சொல்லக் கருதும் சொல் செல்வர்களுக்கும் வித்தியார்த்திகட்கும், துணைநிதியாகத் தம மூலபண்டாரத்திலிருந்தும், இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர் ஆகிய தம்பிரான் பெருமக்கள் மூலமும், கற்றோர்க்குத் தாம வரம்பாகிய தலைமையராகும் வித்வான் மணிகள் நூல் விரிபுலவர்கள் இவர்களைக் கொண்டும் திரட்டிய **உரைவளம்** சித்தரித்து வெளியிட்டமை பண்டித பாமரர்கள் யாவரும் போற்றற்குரியதேயன்றோ! நூல் படம் விரிக்கும் பண்பு தேசிகரதுதான்! மஹாமஹோபாத்தியாய டாக்டர் சுவாமிநாத ஐயரவர்கள் வசன நூல்கள், வசன நடைக்கே எடுத்துக் காட்டாதல் போல, நம செந்தமிழில் உள்ள மூல காவியங்களின் உரைப்பெருமைகாணும் ஆராய்ச்சிநூல்களுள் இந்தத் திருக்குறள் உரைவளமே முதலாகவைத் தெண்ணத் தகுந்தது. அருள் வள்ளல் மடாதிபதி யவர்களும அவர்கள் மடமும் சிவத்தைப் போலும தமிழைப் போலும் என்றும் வாழப் பசுபதியைப் போற்றுவோம்.

குத்தகை ஏல விளம்பரம்

தஞ்சாவூர் ஜில்லா மாயூரம் தாலுககா தருமபுர ஆதீனம் மடத்துக்குச் சொந்தமான அடியில் கண்ட கிராமங்களிலுள்ள நஞ்சை, புஞ்சை. பலவிருட்சங்கள் மாசூல் உள்பட வருகிற 1361-ம் பசலி முதல் ஐந்து பசலிகளுககு மேற்படாமல் 28, 29, 30—4—51, 1—5—51 தேதிகளில் பகல் 2-மணிககு மாயூரம் தாலுககா தருமபுர ஆதீனம் கச்சேரியில் ஏலததில் குத்தகைககு விடப்படும். குத்தகை அபேட்சிப்பவர்கள் ஷை தேதிகளில் ஆஜராகி ஏல கண்டிஷனுககு உட்பட்டு ஏலம் கேட்கலாம். மற்றும வேண்டும் விபரஙகள் வேண்டியவர்கள் மாயூரம் தாலுக்கா தருமபுரம் ஆதீனம் கச்சேரியில் நேரில் கேட்டும், தபால் மூலம் எழுதிக்கேட்டும தெரிந்து கொள்ளலாம்.

நெ.	தாலுக்கா.	வட்டம்.	கிருமம்.	நஞ்சை. ஏ.	நஞ்சை. செ.	புஞ்சை. ஏ.	புஞ்சை. செ.	ஏலதேதி
1	மாயூரம்	மாயூரம்	அடியாமஙகலம்	5	68			
2	,,	மனனமபந்தல்	மேலவெளி காளவாய்பள்ளம் புஞ்சையில் நஞ்சை	9	9			28-4-1951
3	,,	மணககுடி	மணககுடி	138	34	56	73	
	,,	வெள்ளாலாலகரம்		2	98	0	31	
	,,	மன்னம்பந்தல்	அககரைப்படுகை	5	24			
4	,,	மூககரம்பூா	மூக்கரம்பூர்	4	65	0	26	

5	,,	நத்தம்	திருநன்றியூர்	209	98	8	77	29–4–1951
6	,,	தருமதானபுரம்	ஆத்துக்குடி	71	78	0	59	29–4–1951
7	சீர்காழி	புதுத்துறை	வெள்ளப்பள்ளம்					
			,, லாட் 1	115	79	15	71	30–4–1951
			,, லாட் 2	112	50	8	57	30–4–1951
8	மாயூரம்	செறுதியூர்	மூளப்பாக்கம்	29	89	2		1–5–1951
9	,,	மன்னம்பந்தல்	மூங்கில்தோட்டம் / மூக்காவெளி	85	84			1–5–1951
	,,	மாயூரம்	,,	7	86			1–5–1951
10	,,	மன்னம்பந்தல்	அச்சுதராயபுரம்	109	29			1–5–1951

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆக்ஞைப்படி,

K. S. Ramaiya,
B. A., B. L.,
ஆதீனம் மானேஜர்.

தருமபுரம் ஆதீனம் கச்சேரி,
6—4—51.

S. Ratnam Pillai,
Chief Superintendent.

அண்டர் வேண்டுவர் கொடியனு மகிடனை யடலாற்
றொண்டர் தங்குறை முடித்தனை துன்பங்க ளகன்றேம்
புண்ட ரீகநேர் வதனியே யாமுனைப் போதங்
கொண்ட வேலைவந் தெங்களா பததினைக குறைப்பாய்.

கு - ரை:- அடலால் - கொன்றதனால், தொண்டாதம குறை - அடியார்களாகிய எங்களுடைய குறைகளை யெலலாம். முடித்தனை - போக்கினாய், புண்டரீகம நேர் - தாமரை மலரை ஒப்பாகின்ற, வதனியே - முகமுடையவளே; போது அகம - மலர் போன்ற மனத்தில், கொண்டபோது - நினைத்தகாலத்தில்.

வி - ரை:- போதகம என்பது ஏனைய ஈற்றுச் சீர்களைப் போல மாசசீராதற பொருட்டுக் ககரங் தொக்குப் போதம் என்றாயிற்று. போதங்கொள்ளல் - அறிநதுதியானித்தல் எனவுமாம். தேவி நீ மகிடனைக் கொன்றதனால எங்களுடைய குறைகளையெல்லாம முடித்துவிட்டாய். எங்களுககு மேலும வரமகொடுக்க வேண்டுமென்பது நின் விருப்பமாயின யாம நினைத்தபொழுது வநது எங்களுடைய ஆபத்துககளையெல்லாம போக்குவாய் என வரம வேண்டினா. 33

உம்பர் வேண்டுவர் மேலுமித் துதியினை யுலகில
நமபி யோதுவோ ரவர்துய ரகற்றியே ஞான
சமப தீந்தரு ளெனவர மளித்த பின்றாயு
மினபொ டேயுறை வீரென வெழுநதனண் மன்னோ.

கு - ரை:- உம்பர் - தேவர்கள். மேலும வேணடுவர் - மேலும தேவியை வரம கேட்பவர்களாய், உலகில் - பூவுலகத்தில், நமபி - நமபிக்கைவைத்து, ஓதுவோர் அவர் துயர் - படிப்பவராகிய அமமனிதாகளுடைய துயரங்களை, அகற்றி, ஞானம் - அறிவு வளர்சசியையும, சமபத்து - பணம மனைவி முதலாகிய செல்வங்களையும, ஈநது அருள் என - கொடுத்தருள் வாய் என்று வரம்கேட்கவும, தாயும் - தேவியும, வரம அளித்த பின் - வரம கொடுத்தபிறகு, எழுநதனள - வான்வழியாகச சென்றனள். மன் ஓ ஆசை.

வி - ரை தேவர்கள் வேண்டிய வரம் - நினைத்தபோது வந்து தேவர்களின் ஆபத்துகளைப் போக்குதலும் தேவர்கள் சொல்லிய இத்தோத்திரங்களை நம்பிக்கையுடன் படிக்கும் மனிதர் களுக்குச் செல்வத்தைத் தந்தருளுதலுமாம். வழிபடுவோருக்கு மறுமைச் செல்வங்களைத் தந்தருளுவதேயன்றி இம்மையில் பெறவேண்டிய செல்வங்களையும் தந்தருள்பவள் தேவியேயெனத் தெளிந்து அவளை வழிபட்டு விரைவில் காரியசித்தியை யடைதல் அறிவுடைய மனிதராயினோர் கடமையாமென்பது இச்செய்யுளால் அறிதற்குரிய முக்கிய விடயமாம். 34.

இந்த வாறருட் சத்திதன் னருளினை யியைந்து
முந்து வானவர் தமமுடை முதுநக ரடைந்தார்
அந்த மாகிலத் திந்திர வைசிய வறியென்
றுந்து பேரரு ளாலறைந் துயர்முனி பின்னும்.

கு - ரை:- அருள்சத்தி - அருள்வடிவமாகிய சிவ சத்தி யினது. "அருளது சத்தியாகும் அரன்றனக்கு" சிவஞான சித்தி யார் இலக்கணவியல் 9 ஆம் செய்யுள். இயைந்து - பெற்று. முந்து - முதன்மையாகிய. வானவர் - இந்திரன் முதலாகிய தேவர்கள். முதுநகர் - பழமையாகிய நகரங்களை (அடைந்தார்.)

வி - ரை:- அந்தம் - அழகு, இந்திர அறி - அரசனே அறிவாய். வைசிய அறி - வணிகனே அறிவாய். உந்து - மேலெழும்புகின்ற. உயர்முனி - உயர்வாகிய சுமேதச முனிவ ரானவர். பின்னும் - மேலும் (சொல்வார்) 35.

கவுரி தனகளே பரத்தினிற் சாதையாய்க் கழிந்த
சவுரி யமமுறு மாயையாம பகவதி தானே
யுவமையிறசும்பநிசும்பரைதொலைத்த மையுரைப்பேன்
நவையி ஞன்கதா மத்தியா யமமிவ ணவின்றேன்.

கு - ரை:- கவுரிதன் - பார்வதியினுடைய. களேபரத் தினில் - உடம்பிலிருந்து, சாதையாய் - பிறந்தவளாய், கழிந்த -

வெளிப்பட்ட, சவுரியம் உறும் - வீரம் மிகுந்த, மாயையாம் பகவதி - மகா மாயையாகிய தேவியானவள், தொலைத்தமை - அழித்ததை, உரைப்பேன் - (ஐந்தாவது அத்தியாயத்தில்) சொல்லுவேன். நவை இல் - குற்றமில்லாத. இவண் - இப்பொழுது. நவின்றேன் - சொன்னேன்.

வி - ரை:- சாதம் - பிறப்பு; சாதை - பிறந்தவள். இதனுடைய ஆண்பால் சாதன் என்பது. "குறங்குச் சாதன்" 12 ஆம் அத் 23 ஆம் செய்யுள். கழிந்த சவுரியம் எனக் கூட்டலுமாம். கழிந்த - மிகுந்த. சத்தியின் அனந்தபேதங்களுள் மாயையும் ஒன்றாதலின் "மாயையாம் பகவதி" என்றார். பகவதி - பகவானுடைய சக்தி. பகவானைப்போல் நித்தியமாயிருப்பவள். மாயை இறைவனுக்குரிய சக்தியாம். "விமலனுக்கோர் சத்தியாய........மாயை மயக்கமுஞ் செய்யும்" சிவஞான சித்தியார் 2 ஆம் சூத். 3 ஆம் அதிகாரணம். 36.

நான்காம் அத்தியாயம் முற்றுப்பெற்றது.

5. சும்பன் சுக்ரீவனைத் தூதுவிட்டதுரைத்த அத்தியாயம்.

முன்னாட் சும்ப நிசும்பரென மொழியு மவுணர் தோன்றியவர், சின்னா ளதனிற் றிடசித்தஞ் சேர்ந்தே புனித புட்கரத்தின், மன்னி நின்றே யயுதமெனு மாவாண் டயனை யுளத்தெண்ணிக கொன்னார் தவத்தை யியற்றவரன் றோன்றி வரனைக கொடுத்தகன்றான்.

கு - ரை:- தோன்றி - பாதாளத்திலிருந்து பூமியில் வெளிப்பட்டு; திடசித்தம - மனதிலுறுதி. புட்கரத்தின் மன்னி நின்று - புட்கர மென்னுந் தலத்திற் சேர்ந்து; புட்கரம் எளிதில தவசித்தியைக் கொடுப்பது. 'பூமபிரவாகை மேவி புட்கரம புரிந்து நோற்பர்' என்பது வேதாரணிய புராணம. அயுதமெனு மாவாண்டு - பத்தாயிரம் என்று சொல்லப்படுகின்ற பெரிய வருஷங்கள். 'பெரியவா றயுத மாண்டு பெருநதவமியற்றி யிடடான்' என்பது அநுசாரிக பருவம, கொன்னார் - பெருமை பொருந்திய. வரன்தோன்றி - பிரமன் வெளிப்பட்டு, வரனைக் கொடுத்து - சுமபநிசும்பர்கள் வேணடிய வரங்களைக் கொடுத்து.

வி - ரை:- 'வரன் வரனைக் கொடுத்து' என்பதிலுள்ள சொன்னயங் காண்க. அவன கொடுத்த வரமாவது சும்பநிசும் பர்கள் மகளிர் ஒழியநின்ற தேவமானுட மிருக பட்சிகளால் இறவாதவரம்.

அனைய ராகண் டலனரசு மனலி யரசு மதியரசு, நினையவரிய கௌபேர மாகநி னேய நிகரிலலாப், புனையா மியம்வா ருணமுலகங் கிருது பாக முதற்புகலத், தனையு மடககித் தேவர்புரி தனனைத் தன்சே வகர்க் களித்தார்.

கு - ரை:- அனையர் - சும்பநிசும்பர்கள். ஆகண்டலனரசு- இந்திரனுடைய அரசாட்சி. அனலி - சூரியன். கௌபேரம் - குபேரனுடைய அரசாட்சி, ஆக்கினேயம- அக்கினியினுடைய

அரசாட்சி யாமியம் - யமனுடைய அரசாட்சி. வாருணம் - வருணனுடைய அரசாட்சி (ஆகியவைகளையும்) உலகம் கிருது பாகம் முதல் புகல் அத்தனையும் - மூவுலகங்களிலும் தேவர்களின் பொருட்டுக் கொடுக்கப்படுகின்ற அவிர்ப்பாகங்கள் முதலாகச் சொல்லப்படுகின்ற அவ்வளவையும், அடக்கி - தேவர்களுக்குரியதாகாமல் தன் கீழ்ப்படுத்தி. தேவர் புரிதன்னை - தேவர்களுடைய பட்டணங்களை, தம் சேவகர்க்கு அளித்தார் - தம்முடைய வேலைக்காரராகிய சண்டமுண்டருக்கு அரசாட்சி செய்யுமாறு கொடுத்தார்கள். 2

வானோர் கோமான் பதியிழந்து மனைவி யோடு மற்றையராந், தேனார் கற்பத் தருநிழல்வா டேவர் மனைவி தம்மோடும், ஊனார் மனுட வுருநண்ணிப் பலியு மேற்றிங் குழல்வதனால், ஆனா வொளிசேர் தமதுகட மெலிந்தே யவச மடைந்தனரால.

கு - ரை:- பதி - அமராவதி என்னும் நகர். மனைவி - இந்திராணி. தேவர்மனைவி தம்மோடும் - தேவர்களோடும் அவர்கள் மனைவிமார்களோடும்; பலி - பிச்சை; இங்கு - இப்பூமியில். ஆனா வொளிசேர் - குறையாத ஒளிபொருந்திய 'ஆனா அறிவின் அவர்கட்கு என்பது காரிகை. கடம் - உடம்பு அவசம் - மயக்கம்.

வி - ரை:- தேவர்கள் ஒளிபொருந்திய சரீரமுடையவராதலின் 'ஒளிசேர் தமது கடம்' என்றார். 3.

சதுர யுகந்தா னுற்பதிவ்வா றகலப் பின்பு தான முளார், மதிதேர் வதன மங்கையரு மாயா தேவி தங்களுக்கே, யிதயத் தனினீ ரன்பமெய்து மெல்லை சிவையா மெனநினைமின், உதவி புரிந்துந் துயர்களைவே னென்னும் வரத்தை யோர்ந்தனரால்.

கு - ரை:- சதுரயுகம் - நான்கு யுகங்கள் கொண்டது. தானம் உளார் - சுவர்க்கத்துள்ள தேவர்களும். மங்கையரும் -

தேவமா தரும, மாயாதேவி - தேவியானவள், எல்லை காலத்தில, சிவையாம - சிவசக்தியாகிய என்னை, ஓர்ந்தனர் - நினைத்தார்.

வி - ரை:- மாயாதேவியின் வரம நாலாம் அத்தியாயம 33, 34-ம செய்யுட்களில காணக 4.

நதிசே ரிமயப் பொருப்பினிடைத் தாதா வோடு சுரர்நணனி, மதிமிக் குதவும பெருங்கருணை வடிவி தன்னைத் துதிக்கின்றார், கதிஎய் தட்டு தேவிசிவை கனமா தேவி பிரகிருதி, நிதியீந் தருள்பத் திரைகௌரி யுருத்தி ரீநின மலிநமவே.

கு - ரை - நதிசோ இமயப்பொருப்பு - கங்கை, சிந்து, பிரமபுத்திரா முதலிய புண்ணிய நதிகள் சேர்ந்துள்ள இமய மலையின்கண, தாதா - பிரமன்; சுரா - மறைத் தேவர்களும், தேவி கருணை வடிவினள் எனபதை 'அருளது சத்தியாகும் அரன்றனக்கு' எனச் சிவஞானசித்தியாரினும, 'பரபோகந்தரும் கருணை உருவாகி' எனச சிவப்பிரகாசத்தும, உணாக, கதி - மோட்சம, ஈ - கொடுக்கின்ற; தேவி - ஒளி வடிவினள், சிவை - நன்மைகொடுப்பவள, மாதேவி-பிரமன முதலிய தேவாகளுக்குச சுவர்க்கம முதலிய பதவிகளைக கொடுக்கக் கூடியவள. பிரகிருதி - படைப்புசசக்தி, பத்திரை - காத்தல சத்தி, கௌரி - கௌர நிறமுடையவள். கௌரம வெண்மைகலந்த செந்நிறம எனபர் உருத்திரீ - அழித்தற் சக்தியே நின்மலி - ஆணவமலம சம்பந்த மில்லாதவள், நம - வணக்கம.

வி - ரை:- ஈங்குக்கூறிய தேவி முதலிய நாமங்கள் விளி வேற்றுமையில இயல்பாய் வந்தன தேவி இமயமலையில நீங்காது வாசம செய்பவளாதலினாலும் அவளே விரைவில அருள் செய்பவ ளாதலினாலும், அவளே எல்லாவிதமான ஆபத்துக்களைப் போக்குகின்றவளாதலினாலும தேவாகள இமயமலையினகண் சென்று தேவியைத் தோத்திரம செய்தார்கள் மகா கைலாச நிலயா, சதயபராசாதிகி, சாவாபத் விநிவாரிணி எனனும

தேவியின திருநாமங்கள் ாண்டு அறிதற்குரியன பிரகிருதி: பரமாத்மாவைத தன சகதியினல் பலவேறு சீவர்களாச் செய்து முக்குணங்களின் உருவமாய் அக்குணங்களின மூலம ஐமபெரும பூதங்களைப் படைப்பதே மூலப்பிருகிருதியாம. அதுவே இவ்வுலகத் தோறறத்திற்கு மூலகாரணம என்று சொல்லபபடுகிறது 5.

விளாபு யெழிறரூத திரிநிலவு மதியி னுருவி
கல்யாணி களங்க மிலலா வடியர் அயர் களைவாய் நமவே
சித்திநம, துளக்க விலலா நைருதிபூத தாங்கு மரசர்
துணையிலசெல்வி, வளஞ்சே ருஞசர் வாணிதுர்கமை
பாரை நமநமவே.

கு - ரை:- தாத்திரி - உலகத்தைத் தரித்திருப்பவள, நிலவு உருவி - சநதிரிகையின் வடிவமாய் இருப்பவள், மதியின் உருவி - சநதிரனுடைய உருவமாய இருபபவள. கல்யாணி - மஙகளதனதச செய்பவள, சித்தி - அணிமா முதலிய சித்திகளின உருவமாய இருபபவள், உபயங்களில் தேடபபடும பலனுய் இருபபவள என்னலுமாம நைருதி - நிருதி என்னும அசுர ஞகிய திககுப் பாலகனது சகதி (அதாவது, அசுரசக்தி) பூ - பூமி, துணையில் - ஒபபு இல்லாத. அரசா செல்வி - அரச லடசுமி, சாவாணி - சிவசகதி சொருபமானவள, துாகமை - துககப்படடு அறியபபடு பொருள்; தெரிநது கொள்ளமுடியாத வள; சிரமபபடடு தெரிநதுகொள்ளத் தருநதவள். துர்கம பாரை - சங்கடததிலிருநது கரையேறறுபவள. பிறபபு, இறபபுக்களினினறும கரையைச சேர்ப்பிககிறவள.

வி - ரை:- தாத்திரி ஜகததிற்கு ஆதாரமான கூர்மசக்தி யாக இருப்பவள என்பா, துாகம பாரை - கடக்கமுடியாத பிறவிககடலின் கரையாயிருப்பவள் எனனலுமாம. 6.

சாரை சருவ காரிணியே கியாதி தாவில கிருட்டிணியே
சேருந் தூமி ரையதிகஞ் சிறநத சௌமி யதிரௌததிரி
ஒரு மூலகப் பிரதிடடை யோககி பூதிப் பிரஜைநம
வாரும பூதி நமநமவே யெனன வாழ்த்திவணங்கினரால.

கு - ரை:- சாரை - பலமுடையவள்; சருவ காரிணி - எல்லாவற்றையும் செய்தலில் சுதந்திரமுடையவள், கியாதி - கிரசித்தி, கிருட்டிணி-கிருஷ்ணசக்தி, கருப்புவர்ணமுடையவள். தாமிரை - கருமை கலந்த சிவப்பு நிறமுடையாள், சௌமி - சாந்தரூபமுடையவள் வித்தியாரூபமா யிருந்துகொண்டு சமசார துக்கத்தைப் போக்கடிப்பவள், வித்தியாத்தன்மையில் சமசாரத்தைச் சமிப்பித்தலால் 'அதிகம சிறந்த சௌமி' எனப்பட்டாள், அதிரௌத்ரி - அதிக கோபத்தோடு கூடிய பயங்கர வடிவமானவள், அவித்தியா ரூபமாயிருந்துகொணடு சமசாரபயததை உணடுபண்ணுபவள் உலகபபிரதிட்டை - எல்லாவுலகங்களையும தனனிடம தாபித்திருப்பவள். எனவே எல்லாவுலகங்களுக்கும ஆதாரமாயிருப்பவள எனபதாம. பூதிபபிரதை - ஐசவரியங்களைக் கொடுப்பவள. பூதி - ஐசவரிய ரூபமானவள். 7

யாவள் சகல பூதத்து மரிதன மாயை யாயமர்வள்
தேவி தனககு நமககாரஞ சிறந்த சகல பூதததும
ஓவ லிலதாஞ் சததியென வுற்று டனககு நமககாரம்
யர்வள சகல பூததுஞ சேதனரூபிணியாவள்.

கு - ரை·— அரிதன் மாயை - விஷ்ணுமாயை, மூலசாத்த வித்தை எனபர். ஓவல்இலதாம - நீங்குதல இல்லாததாகிய, தேவி - தேவசகதி, சேதனரூபிணி - அறிவு சொரூபமாயிருப் பவள சிவஞடி. அநதக்கரண விருத்தி சொரூபமானவள் தத்துவ ஞானரூபமுடையவள 'சேதனரூபா' 417, லலிதா ஸகஸ்ரநாமம

யாவள் சகல பூதததும புதகி யுருவி யாயமர்வள
யாவள சகல பூததுஞ சிருட்டி யுருவி யாயமர்வள
யாவள் சகல பூததுந திதியி னுருவா யமர்நதிடுவள
யாவள் சகல பூதத்து மழிதத லுருவி யாயமாவள்.

கு - ரை:— புத்தியுருவி - மனத்தின் விஷயங்களை ஆன்மா விறகறிவிககும அநதக்கரண விருத்தி ரூபமாய் இருப்பவள. சவிகறபஞானம் என்றும கூறுவர். சிருட்டியுருவி - படைத்தல் சக்தி, திதியின் உரு-காத்தல் சக்தியின் வடிவம, அழித்தலுருவி- சங்கார சக்தியின் உருவமாயிருப்பவள். 9.

உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
ஒருசொல் நடைய பொருள்சென் மருங்கே. 104

என் - எனின், பல உருபு தொடர்ந்தடுக்கியவழிப் படுவதோர் இலக்கணம உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஐ முதலிய அறுவகையுருபும் தம் பொருட் டொடர்ச்சிபட அடுக்கிவருகின்ற அவ்வேற்றுமைப் பொருண்மையினையுடைய சொற்கள், அவ்வடுககின் கடைககண்நின்ற வேற்றுமைச சொல்லிற்கு முடிபாகிய சொல்லினையே தமககு முடிபாகவுடைய, பொருள்படும் இடத்து என்றவாறு.

உ - ம்: யானையது கோட்டை நுனிக்கண் குறைத் தான். யானையது என்பது கோடு என்பதனோடு தற்கிழ மைப்பட்டு ஆண்டே முடிந்தது. நுனிககண் என்னும் ஏழாவது குறைத்தான் என்பதனோடு முடிந்தது.

இடைக்கண்நின்ற கோடு என்னும் இரண்டாவது முடிபு இன்றி நின்றது. அவ்வாறு தனககுரியதோர் முடிபின்றே எனினும் ஏழாவதன் முடிபோடு முடிந்த தாகக் கொள்ளப்படும் அவ்வாறு பொருள்படநின்றமை யான் என்பது. தினையிற் கிளியைக கடியும் என்பது தினையின் என்னும் ஐந்தாவது கிளியை என்னும் இரண் டாவதன் வினையொடுமுடிந்தது. பிறவுமன்ன. அதிகாரத் தான் இதுவும் ஓர் மரபு வழுவமைதி என உணர்க. (கக)

இறுதியும் இடையும் எல்லா உருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார். 105

என் - எனின், உருபு நிற்குமிடம்கூறுதல் நுதலிற்று.

இ-ள்: இருபொருளின் இறுதிக்கண்ணும் அவ் இரு பொருளின் இடையின்கண்ணும் அறுவகை வேற்றுமை

யுருபு வழககுப்படும் பொருளிடத்து நிலைபெறுதலை நீககார் ஆசிரியர் என்றவாறு.

உ-ம்: கடந்தான் நிலத்தை, வந்தான் சாத்தனொடு, கொடுத்தான் சாத்தற்கு, வலியன் சாத்தனின், ஆடை சாத்தனது, இருந்தான் குன்றத்துக்கண்: இவை இறுதிககண் வந்தன.

நிலத்தைக் கடந்தான், சாத்தனொடு வந்தான், சாத்தற்குக கொடுத்தான், சாத்தனின் வலியன், சாத்தனது ஆடை, குன்றத்துககண் இருந்தான்: இவை இடையின் கண் வந்தன.

மற்று இது "பெயர்க்காகும்" (70) என்றவழி அடங்கிற்று பிற எனின, அஃது ஒருகண் சொற்கணணுருபு நிற்குமாற்றிற்குச் சொல்லியது. இஃது இருகண் உருபு நிற்குமாற்றிறகுச் சொல்லியதெனை உணர்க. அஃதேல் அவ்வொருசொற்கணினற உருபினை அதன் முடிபாகி வரும் சொல்லொடுபடுதது நோககி, இருசொற்கண வந்தாம எனபது சொல்லாமையும அமையவும பெறுமன்றே எனின், அவ்வாறு உய்த்துணர்வதனையே இனிது உணர்தற்பொருட்டாகவும, உருபுநோககிவரும் சொல அவ்வுருபின முன்னில்லாது பின்னிற்றல் மயகக நீர்மைதது எனற் பொருட்டாகவும் ஈண்டுக கூறினர் என உணர்க. "வரையார்" எனவே வழுவுடைத்து எனபது போந்தது. "நெறிபடுபொருள்" என்றதனால, இவ்வாறு இடையும் இறுதியும் உருபுநிற்பது, உருபேறறு வழஙகும பெயர்ககணணே; வழஙகாத பெயர்க் கண் நிலலா என்பது.

உ-ம். அவ்வழிககொண்டான் என்பது, அவ்வழிக கட் கொண்டான் எனவும், கொண்டான் அவவழிககண் எனவும அவ்வாறு வழஙகுவாரின்மை இல்லாதாயிற்று.

வழங்குவாருண்மையின் அவ்விடமென்னும் பெயர்க்கண் அவ்விடத்துககண் கொண்டான் எனவும், கொண்டான் அவ்விடத்துப்பொருள எனவும் நின்றதென உணர்க. மற்றிஃது "எவ்வயிற் பெயரும்" என்புழி அடங்கிற் றன்றே எனின், இதுவும் அவ்விருசொற்கண் வருமாற் றிற்குக் கூறினர் என்பது. (உ0)

பிறிது பிறிதேற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப. 106

என் - எனின், விசேடவகையான் உருபிற்கு உரிய தோர் இலக்கணமும், எல்லா உருபிற்கும் பொதுவாய தோர் இலககணமும உணர்த்தலின் நுதலிற்று.

இ - ள்· ஓர் உருபு ஒருருபினை ஏற்று நிற்றலும் எல்லா உருபுகளும தொககு வருதலும் இவை இரண்டு முறைமைப்படவியலும் வழககின்கண்ணேயுள என்று சொலலுவர் ஆசிரியர் எனறவாறு.

உ - ம்: *பிறிது பிறி தேற்றற்கு* உதாரணம்: சாத் தனதனை, சாத்தனதனொடு என ஏழாவதன்காறும் ஒட்டுக. சாத்தனது அது எனத் தன்னுருபு தன்னை ஏலாது பிறிது பிறிதேற்கும் என ஏற்பது ஆறாவதென ....அதனையொழிய எற்குமென்பதூஉம் பெறுமாறு என்னை எனின், முன்னர் உருபேறபது பெயரென்று கூறினமையின் பிறிதென எய்துபட அல்லாதென்பது பெற்றும்.

அஃதேயெனின் பிறசொற்களும் பிறிதெனப்படு மால்...... ... .கோடலென்பதனன் இது வயிற்றென்பது பிறதேற்றலெனவே தன்னையேலாதென்பது பெற்றும். இனி "ஒன்றின முடித்தல" என்பதனல் சாத்தனது னனறு எனப் பயனிலைகோடலும் சாத்தன் ....விளி யேற்றலும உடைத்து என்பது கொள்ளப்படும்.

உருபு தொக்குவருவதற்கு உதாரணம். நிலங்கடந்தான், தாய்மூவர், கருப்புவேலி, வரைவீழருவி, சாத்தன் ஆடை, குன்றக்கூகை எனவரும்.

இவ்வுருபுகள் தொகுமிடத்து உருபும் பொருளும் உடன்தொகலும், ஒருவழி உருபே தொகலும் என இருவகைய.

அவ் ஆறு உருபினுள்ளும் ஆறாவது உருபே தொகுவது, அல்லன எல்லாம் இவ்வாறு தொகும எனக் கொள்க. படைக்கை என்பது உருபும் பொருளும் உடன் தொக்கது. நிலங்கடந்தான் என்பது உருபுதொக்கது. பிறவும் அன்ன.

இதனால் சொல்லியது உருபு தன்னிலக்கணமாறிப் பெயரிலக்கணம் எய்துதலும, தன்பொருள்வழித் தான் இல்லாதாகலும், வழுவே எனினும் மூற்கொண்டமைந்த வழக்காதலான் களையலாவன அல்ல என மரபு வழு வமைதி கூறியவாறு. (உக)

ஐயும் கண்ணும் அல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகா இறுதி யான. 107

என் - எனின், மேல் உருபுகள் தொக்குவரும் என்புழித் தொக்குவருவனவற்றது நிலை ஒவ்வாமைகண்டு அஃது உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: இரண்டாவதன் பொருண்மையும், ஏழாவதன் பொருண்மையும் அல்லாத பொருள்களிடத்து வருகின்ற உருபுகள் தமக்கு உண்மையாகிய வடிவு தொகா இருமொழியின் இறுதிக்கண் என்றவாறு.

உ - ம்: கடந்தான் நிலம், இருந்தான் குன்றத்து எனவரும். வந்தான் சாத்தனொடு என்பது வந்தான்

சாத்தன் என ஒருத்தொக்குழி அப்பொருள் விளங்காமையின் அந்நிகரன இறுதிக்கண் தொகாவாயின. ''நானிலமன்ற'' (35) என்னும் குறுந்தொகையுள் ''பிரிந்திசினோர்கரு அழல்'' என ஆனிறுதிக்கண் தொக்குநின்றதால் எனின் அந்நிகரன வழக்கினுள் இன்மையின் செய்யுள் விகாரம என்க. (உஉ)

யாதன் உருபின் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும். 108

என் - எனின், உருபுகள் ஒரோவழித் தம பொருண்மையின்றி மயங்குதலுடைய என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஒருபொருண்மை யாதானும் ஓர் உருபினுல் கூறப்பட்டதாயினும் அப்பொருண்மை அவ்வுருபினதாகாது அப்பொருள் செல்லும கூற்றினையுடைய வேற்றுமை ஆண்டுவந்துசார்ந்த அப்பொருளினைகொள்ளும் என்றவாறு.

உ - ம்: ''கிளையரி நாணற்கிழங்குமணற் கீன்ற, முளையோரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்'' (அகம் 212) என்னும் பாட்டினுள், மணலுள் ஈன்ற என்பது மணற்கீன்ற என்றாயிற்று.

இவ்வாறு பொருளன்றியும் மயங்கும் என்றேல் வேண்டியவாறெல்லாம வரப்பெறும் என்றவாறாம. பிற எனின், அதுவன்று; வழககுள்வழிய தம்முடிபு எனக கொள்க. (உங)

எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபின்
பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே. 109

என் - எனின், அவ்வேற்றுமைகள் தம பொருள் மாறுபட நினறவழியும், தம் பொருள என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஐ முதலிய ஐவகை உருபிற்கும செயப்படு பொருள் முதலாக ஓதப்பட்ட பொருண்மைகளை எதிர் மறைபடச்சொலலும் தமக்குரிய மரபாகிய அப்பொருள் நிலைமையில திரியா அவ்வேற்றுமைச் சொற்கள் என்ற வாறு.

உ - ம்: மரத்தைககுறையான், சாத்தனொடுவாரான் எனவரும். பிறவும் அன்ன. (உச)

குஐ ஆன் என வருஉம் இறுதி
அவ்வொடும் சிவணும் செய்யு ளுள்ளே. 110

என் - எனின், அவ்வுருபுகள் ஒருசாரன செய்யுளுள் திரிபுபட நிற்றலுடைமைகண்டு அஃது உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: கு என்றும், ஐ என்றும், ஆன் என்றும் சொலலவருகின்ற உருபு ஈறுகள் அகாரதத்தோடுபொருந்தி ஈறுதிரிநது நிறறலும உடைய, செய்யுளிடத்து என்ற வாறு அவைகளை முனனர்ச சொல்லுதும். (உரு)

அவற்றுள்,
அஎனப் பிறந்தல் அஃறிணை மருங்கின்
குவ்வும் ஐயும் இல்லெனை மொழிப. 111

என - எனின், எய்தியது விலககுதல் நுதலிற்று.

இ - ள்: அ என ஈறு திரித்து நிற்றல், அஃறிணை இடததுக்கு என்னும உருபும், ஐ என்னும் உருபும இல்லாமையுடைய என்றவாறு.

எனவே உயர்திணையிடத்து மூன்றுருபும் திரியும என்பதூஉம், அஃறிணைககண் ஆன் என்னும் உருபு ஒன்றுமே திரியும என்பதூஉம் பெற்றாம்.

உ-ம்: "கடிநிலையின்றே யாசிரியர்க்க" ஆசிரியர்க்கு எனற்பாலது ஆசிரியர்கக என்றாயிற்று. "காவலோனக களிறஞ்சும்மே" காவலோனை எனற்பாலது காவலோன என்றாயிற்று. புலவரான் என்பது புலவரான என்றாயிற்று. இவை உயர்திணைககண்திரிந்தவாறு. புள்ளினான் என்பது புள்ளினான என்றாயிற்று. இஃது அஃறிணைககண் திரிந்தவாறு. அவ்வொடும் என்றஉம்மை எதிர்மறையாகலான ஈறுதிரியாமல நிற்றல் பெரும்பான்மை. இவை இடைச்சொல்லாதலின் தமமீறு திரிதல் என்புழி அடஙகாதோ எனின், வழககினுள் இவ்வாறு வாராமையின் அடங்கா என்பது. (உசு)

இதன திதுவிற் றென்னும் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருளவயி னானும்
அதனாற் செயற்படற் கொத்த கிளவியும்
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பின் ஆக்கமும்
காலத்தின் அறியும் வேற்றுமைக கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்து மொழிக் கிளவியும்
அன்ன பிறவு நான்கன் உருபில்
தொன்னெறி மரபின தோன்ற லாறே. 112

என - எனின், நான்காம் வேற்றுமை, ஏனைய வேற்றுமைக்கண்ணெல்லாம சென்று மயஙகுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இப் பொருளினுடையது தான் இத் தன்மைத்து என்று சொல்லப்படும் ஆறாவதன் பொருண்மை

யும், ஒன்றனையொன்று கொண்டிருக்கும் என்று சொல்லப்படும் இரண்டாவதன் பொருண்மையும், ஒன்றான் ஒன்று செயப்பாடுடைத்தாதற்குப் பொருந்துதல் என்னும் மூன்றாவதன் பொருண்மையும், முறைமையைக் கொண்டெழுந்த ஆறாவதன் பெயர்ச்சொல்லாகிய சொல்லின் பொருண்மையும், எல்லைப்பொருண்மையை வரைந்து உணர்த்தலுடைய ஐந்தாம் வேற்றுமைப் பொருண்மையும், பண்பினாகி வருகின்ற ஐந்தாவதன் பொரூஉப் பொருண்மையும், காலப்பொருண்மையான் அறியப்படுகின்ற ஏழாம்வேற்றுமைப் பொருண்மையும், பற்றுவிடுதலாகிய ஐந்தாவதன் நீக்கப்பொருண்மையும், தீர்தல் என்னும் வாய்பாட்டதாகிய ஐந்தாவதன் நீக்கப் பொருண்மையும் அத்தன்மையன பிறவேற்றுமைப் பொருளிடத்து நான்கனுருபில் அடைத்துக் கூறுதலைப் பழையநெறி முறையாகவுடைய; அவை தோன்றும் நெறிக்கண் என்றவாறு.

உ-ம்: யானையது கோடு கூரிது என்புழி யானைக்குக் கோடு கூரிது என்றாயிற்று. இவனைக் கொள்ளும் இவ்வணி என்புழி இவனுக்குக் கொள்ளும் இவ்வணி என்றாயிற்று. வாயாற்றக்கது வாச்சி என்புழி வாய்க்குத் தக்கது வாச்சி என்றாயிற்று. ஆவினது கன்று என்புழி ஆவிற்குக் கன்று என்றாயிற்று. கருவூரின் கிழக்கு என்புழி கருவூர்க்குக் கிழக்கு என்றாயிற்று. சாத்தனின் நெடியன் என்புழி சாத்தற்கு நெடியன் என்றாயிற்று. மாரியுள்வந்தான் என்புழி மாரிக்கு வந்தான் என்றாயிற்று. ஊரிற்பற்றுவிட்டான் என்புழி ஊர்க்குப் பற்றுவிட்டான் என்றாயிற்று. ஊரில் தீர்ந்தான் என்புழி ஊர்க்குத்தீர்ந்தான் என்றாயிற்று.

இனி, அன்னபிறவும் என்றதனால் ஊரிற்சேயன் என்புழி,ஊர்க்குச்சேயன் என்றாயிற்று காட்டிற்கணியன் என்பதும் அது. இவையெல்லாம் உருபும் பொருளும்

குருபாதம்.

ஞானாவரண விளக்கமும் ::
:: அரும்பத விவேகமும்.

காப்பு

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த னால்வாயைங் கரத்தனாறு, தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான் றரு மொருவா ரணத்தின்றாள்கள், உருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே யிரவுபக லுணர்வோர் சிந்தைத், திருகோட்டு மயன் றிருமால் செல்வமுமொன் றோவென்னச் செய்யுந்தேவே.

ஆரண முதலா வனைத்துமைந் தொழிற்குங்
காரண மெனுமொரு கடவுளை
வாரண முகனை வணங்குது மகிழ்ந்தே.

மலைமகள் கொழுநன் மைந்தர் நங்குரவர்
கலைமகள் சேவடி கருதுதுங்
தலைமைசா லறிவு தலைப்படல் குறித்தே.*

அரும்பத விவேகம்

இனி அகத்தில் அகப்புறச் சமயம்.

ஆலம்வித் தென்னவைச்ச தச்சிவ ஞானபோத
மூலமா யதிலெழுந்த முனைச்சிவ ஞானசித்தி
மேலவாந் தனிருமற்றும் விரிந்தஞா னந்ததீபஞ்
சாலவும் பலமுயிர்க்குத் தருமரும் பதவிவேகம்.

---

* முத்திநிச்சயப்பேருரை காப்பை அடியொற்றியெழுந்தது.

மலைமகள் கொழுநன் மைந்தர் நங்குரவர்
கலைமகள் சேவடி கருதுதும் பரமென
வருந்தமிழ் ஞானாவரண விளக்கத்
தரும்பத விவேக மாமுறை செயற்கே.

ஆசிரியர் அகச்சமயம் என்றது, ஞானாவரண விளக்கம் என்னும் இந்நூலின் முன்னர்ப் புறப்புறச் சமயப் புறச்சமய சங்கற்ப நிராகரணங் கூறி, இனி அகச்சமய சங்கற்ப நிராகரணம் கூறத்தொடங்கி முதற்கண் அது கூறும் இயல்புணர்த்துகின்றது:

*   *   *

பதப்பொருள்வெளி. ஈண்டு ஆசிரியர் என்றது அருணந்திதேவர் என்னும் அடிகளை. இனிச் சிறிது சொல்வாம் என்றது ஓரோவழி ஆகமமும் மற்றுஞ் சிறிது கண்டதுபற்றி. (1)

*   *   *

பொழிப்புரை என்பது அகச்சமயம் இருவழிப்படும் என்பதும், அவை கொண்ட வளவும், பொருளும் இவற்றியலுமென்பதுங் கூறுகின்றது. ஈண்டுப் பர அபர சர்வாங்க பிரதிபாதகமான ஞானாவரண சித்தாந்தத்திற்குச் சைவாதி அகச்சமயங்கள் பெரும்பான்மையும் ஒத்தியலுமெனவே புறசசமய மவ்வாறொத்தியலாவென வருதலின் அகச்சமயம் சூட்சுமார்த்த பிரதிபாதகம் எனவும், புறச்சமயம் ஸ்தூலார்த்த பிரதிபாதகம் எனவும் பெறப்பட்டது. அது யோகஜத்தில்,

स्थूलं च सूक्ष्मकं चैव समयं द्विविधं भवेत् ।
स्थूलं बाह्यमिति प्रोक्तं सूक्ष्ममाभ्यन्तरं स्मृतम् ॥

என வருமாற்றான் உணர்க. அவற்றின் பேதம் சங்கிரக மாக ஸ்ரீமத் அசிதாகமத்தில்,

लोकायतोऽथ बौद्धश्चार्हतो मीमांस एव च ।
मायावादः पाञ्चरात्रं षडेते समया बहिः ॥

எனவும்,

शैवं पाशुपतं वामं भैरवं तु महाव्रतम् ।
कालामुखमिति ख्यातमन्तः समयषट्ककम् ॥

எனவுஃ வருமாற்றான் உணர்க. ஈண்டுச் சைவம் என்றது சுத்த சைவம் என்னும் சௌமிய சைவத்தை; பாசு பதாதிகள் அசுத்த சைவம என்னும் ரௌத்திர மாகலின். அது ஸ்ரீமத் சுப்பிரபேதத்தில்,

तदेवं सौम्यमाख्यातं, तन्त्रं पाशुपतादिकम् ।

என வருமாற்றான் உணர்க. ஈண்டுக் காமிகாதிமூலமான சௌமிய சைவத்தைச் சித்தாந்தமென்றலின், பூர்வ பக்கமாக எண்ணப்படும் அறுவகைச் சமயத்துளொன் றுமோ எனின், வேதத்திற்குப் பூர்வமீமாஞ்சை உத்தர மீமாஞ்சை இருப்பனபோலச் சௌமியசைவத்துக்கும் பூர்வபாகமான கர்மாந்தசைவம் என்பது பூர்வபக்ஷ மாயும் சௌமிய சைவாந்தமான ஞானாந்தம சித்தாந்த மாயும் கூறுதலின் அவ்வாறு ஆம் என்க.

அன்றி, காளாமுக பேதமான காபாலத்தைப் பிரித் தோதி ரௌத்திரசைவம் அறுவகைத்தாக்கிச் சௌமிய சைவமான காமிகாதிகள் சிததாந்தமெனக கூறினு மாம். அசிந்திய விசுவசாதாக்கியத்தில்,

वामं तु त्रिविधं प्रोक्तमनादिः पूर्वपश्चिमम् ।
चतुर्विधं दक्षिणं स्यान्महाव्रतमतः परम् ॥

कालामुखं च कापालं तद्वत्पाशुपतं भवेत् ।
शैवं चतुर्विधं प्रोक्तं सिद्धान्तं द्विविधं भवेत् ॥

எனவும், சுப்பிரபேதத்தில்,

शैवं पाशुपतं सोमं लाकुलं तु चतुर्विधम् ।
तेषु शैवं परं सौम्यं रौद्रं पाशुपतादिकम् ॥

எனப் பிரிந்தோராற்றாற் கூறிய வழியும் சௌமியம் பரம சித்தாந்தமென வந்தவாறு காண்க. பிறவும் விரித்துக் கொள்க. (2)

* * *

"அகப்புறந்தா னிருவிதமாம்" என்பது அகப்புறம் படும் பாகுபாடு கூறுமுகத்தான் மேற் காணபத்திய கௌமாரமதங் கூறுதற்குத் தோற்றுவாய் செய்கின்றது. ஈண்டு, 'அகப்புறந்தா னிருவிதமாம் வாமஞ் சாம பவமு மங்கியலுந் தக்கிணமு மதுபோ லாகும்' என்புழித் தக்கிணமென்றது வேறொருமதமேயன்றி,

वामं हि शाम्भवं शास्त्रं भैरवं दक्षिणात्मकम् ।
मिश्रं यामलमित्युक्तं सप्तमातृप्रधानकम् ॥

எனவும்,

वामं च दक्षिणं चैव तद् द्वयोर्मिश्रकं तथा ।

எனவும் வரும் வைரவ தந்திரமான தக்ஷிணத்தைக் கூறியதன்று. பின்னும் தக்ஷிணம் என்றது யாதோ எனின் ஈண்டு மிசிரத்தை வாம வைரவத்துள் அடக்கிச் சுத்த சைவத்தைத் தக்ஷிணமென்றலின் மாறுபாடின்று. அது மேல விளங்கும்.

தருமபுர ஆதீனம் பல்கலைக்கல்லூரியில் வள்ளுவர் விழா:— மகரதோரணங்களாலும், திருக்குறள் பொன்மொழிகளாலும் அலங்கரிக்கப்பெற்ற கல்லூரிக்கட்டிடத்தில் 18—3—51 ஞாயிற்றுக்கிழமை கடவுள் வணக்கத்துடன் காலை 9-மணிக்கு விழா தொடங்கப்பெற்றது. கல்லூரிப்பேராசிரியர், வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரைகூற, திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாதசுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரித் தலைவர், பிர்மஸ்ரீ K. M. வேங்கடராமையா அவர்கள் M.A., B.O.L., தலைமை ஏற்றுத் தமது முன்னுரையில் திருவள்ளுவமாலையில் காணும் பொருளை நயம்படக்கூறித் திருவள்ளுவர் பெருமையை விளக்கினார்கள். பின் கல்லூரி மாணவர்கள் S. நடராசன், S. தியாகராசன் இருவர்களும் வள்ளுவர் இசைப்பாடல்களை இசைத்தார்கள். வள்ளுவர் வகுத்தவழி இது எனத் திருவாரூர் போர்டுஹைஸ்கூல் தமிழாசிரியர், வித்துவான், திரு. மு. இரத்தினதேசிகர் அவர்கள் ஒரு சிறப்புச்சொற்பொழிவு ஆற்றினார்கள். கல்லூரிமாணவர், M. அருணசலம் குறளின் பெருமை என்ற தலைப்பில் சிறுசொற்பொழிவு நிகழ்த்தினார். தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர், ரெ. இராமாநுசம் நன்றிகூறக் கடவுள் வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது.

குருஞானசம்பந்தர் கழக ஆண்டுவிழா:— ஆதீனக் கல்லூரியின் சார்பில் நடைபெற்றுவரும் இக்கழக ஆண்டுவிழா; அன்று மாலை, அதேயிடத்தில் நான்குமணிக்கு மீட்டும் கூட்டம் கூடிற்று. திருவையாறு அரசர்கல்லூரித் தலைவர், திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை M.A., அவர்களைத் தலைமையேற்று நடத்துமாறு ஆதீனக் கல்லூரித் தலைவர், பிர்மஸ்ரீ Y. மகாலிங்கசாஸ்திரிகள் M.A. B.L., அவர்கள் வரவேற்று உபசாரவார்த்தைகள் மொழிந்தார்கள். விழாத் தலைவர் ஆணைப்படி செயலாளர் அறிக்கைவாசித்தார். தலைவர் முன்னுரைக்குப்பின் மாணவர்கள் வேங்கடராமன், இரா. சுப்பிரமணியன், ரெ. இராமாநுசம் ஆகியோர்கள் வாழ்விற்கு உகந்தது இலக்கியமா? விஞ்ஞானமா? என்பதுபற்றிச் சொற்போர் நிகழ்த்தினார்கள். ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர், வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் "புலவரும் புரவலரும்" என்பது பற்றிச் சொற்பொழிவுநிகழ்த்தினார்கள். பின்னர் கல்லூரி மாணவர்களில் நால்வர் தத்தமக்கு விருப்பமான வேடங்களைப்பூண்டு காட்சி

அளித்தார்கள். அவர்களில் மிகச் சிறந்த இருவர்களின் (ரவீந்திரன், சீதாராமன்) மாறுவேடத்தைப்பாராட்டி அவர்களுக்கும், கழகச் சார்பில் நடத்தப்பெற்ற கவிதை, கட்டுரை, சொற்பொழிவுப் போட்டி களில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கும் ஆதீன வெளியீடுகள் பரிசாக அளிக்கப்பெற்றன. தலைவர் முடிவுரைக்குப்பின் கல்லூரித் துணைத் தலைவர் நன்றிகூறக் கடவுள் வாழ்த்துடன் இரவு எட்டுமணிக்கு ஆண்டுவிழா இனிது நிறைவெய்தியது.

சீகாழியில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்:— தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் பெண்ணிநல்லாளொடு, பெருந்தகையாகிய தோணி யப்பர் எழுந்தருளியிருக்கும் திருத்தோணிமலையை, அவ்வூர்ப் பெரு நிலக்கிழாரும், சிவநெறிக்காக்கும் செம்பொருட்செல்வரும், உத்தம சீலருமாகிய ஸ்ரீமான் **S. சுப்பராய முதலியார் அவர்கள்** பெரும் பொருட்செலவில் திருப்பணிசெய்வித்து 23—3—51 அன்று அஷ்ட பந்தன மகாகும்பாபிஷேகமும் சிறப்புறநடத்துவித்தார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களும் தரிசனத்திற்கு எழுந்தருளியாகிச் சிறப்பித் தார்கள். மாலை புதுவை, யோகி, ஸ்ரீ சுத்தானந்தபாரதியாரவர்கள், அண்ணாமலைநகர், திரு. S. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இரவு திருவீதிஉலாக் காட்சியும் நிகழ்ந்தது.

ஆதீன தேவஸ்தானங்களில் உற்சவங்கள்:— தரும புர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கடவூர், சீகாழி, திருவையாறு, திருப்பனந்தாள் ஆகியதலத்திலுள்ள ஆலயங்களில் 12—4—51 முதல் 21—4—51 முடிய சித்திரைத் திருநாள் சிறப்பாக நடைபெறும்.

சீகாழியில் 13—4—51 முதல் 1?—4—51 முடிய **திருமுறை மாநாடு** நடைபெறும். அறிஞர்கள்பலர் சொற்பொழிவாற்றுவார்கள். இறுதிநாள் இரவு எட்டுமணிக்கு யானைமீது **திருமுறை வீதிவலம்** திருமுறைப்பாராயணத்துடன் நிகழும்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayavaram) 9—4—1951.